மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 3 சுற்றம் : 5 மே 2015 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



## மாண்புறு மாநிலங்களவை மாமன்னர்

NEW

# FLAT FOR SALE @ BESANT NAGAR

## 4 - in -one luxury Apartment




Site at :

49, MGR Salai,
**Kalashetr**a Colony,
Besant Nagar,
Chennai.

Suresh & Co.
Engineers & Builders

#22, Ponniamman Koil Street Urur, Adyar, Chennai - 20.

ph:044-24463149
94440 18004
94440 48902

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly April 2015

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**நாராயணன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

மாண்புறு மாநிலங்களவை மாமன்னர்
(தலையங்கம்)........ 3

மனைவியிடம் பேசுங்கள்!
மனம் விட்டு பேசுங்கள்!
திருச்சி சிவா........ 6

மொழிஞாயிறு தேவநேயப்பாவணர் ........9

ஒரு குட்டிக் கதை
ஞானமணி........ 11

தமிழீழம் எனும் நெருப்பு
காசி ஆனந்தன்........ 12

மோடி பட்செட் 2015
பொன் ஏழுமலை........18

என்ன பெத்த தாயி (சிறுகதை)
இருங்கோவேள்........ 21

நடந்ததா? நடக்கிறதா?
வேர்மகள் ........26

அரசு ஊழியர்கள் இலஞ்சம் வாங்கினால்
ஏழு ஆண்டு சிறை
வேல் பொன்முடி........ 28

சீவக சிந்தமணி (தொடர்)
புலவர் கு. ஏழுமலை........ 30

தாலி!
பழ கருப்பையா........ 32

இணைய தள சமநிலையை
சீர் குலைக்கும் செயல்
வைகோ அறிக்கை ........34

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் ஒரு வரலாற்றுச் சாதனையை தனி ஒரு மனிதராகச் செய்து காட்டியிருக்கிறார் மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா அவர்கள். இதற்கு முன் 1970 ஆம் ஆண்டுதான் ஒரு நபர் மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் கிரிமினல் மேல்முறையீட்டு வழக்கு விசாரணை அதிகார வரம்பை விரிவுபடுத்துதல் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட சட்டம்.

இப்போது கொண்டுவரப்பட்ட மசோதா திருநங்கைகள் பற்றியதாகும். பல்வேறு பெயர்களில் சமூகத்தில் தாழ்வாக அழைக்கப்பட்ட, கருதப்பட்ட திருநங்கைகளுக்கு கலைஞர் "திருநங்கை" என்ற சொல்லாடலைத் தந்துதவினார். அவரது வழி யொற்றி நடக்கும் திருச்சி சிவா அவர்கள் திருநங்கைகளின் வாழ்க்கைக்கான உரிமை, தனிநபர் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாத்தல், உடல் மற்றும் மனரீதியான கொடுமைகளில் இருந்து அவர்களைப் பாதுகாப்பது, அவர்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பது, கௌரவமான வசிப்பிடங்கள் அமைத்துக் கொடுப்பது, அவர்களுக்கான குடும்பங்களை அமைத்துக் கொள்ள உரிமை, கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் தனி நபர் மசோதா ஒன்றைக் கொண்டு வந்து, அம்மசோதா நிறைவேற காரணமாகத் திகழ்ந்திருக்கிறார்.

இம்மசோதா கொண்டு வரப்படும்போது சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் தாவர்சந்த் கெலாட், அமைச்சகத்தின் விளக்கமும், உச்சநீதிமன்றத்தின் விளக்கமும் கேட்க வேண்டும். பிறகு விரிவான சட்டத்தை கொண்டு வரலாம் என்று சாக்குப் போக்குச் சொன்னபோது, சிவா அவர்கள் "இதுதான் சரியான நேரம். இந்த மசோதாவை நிறைவேற்ற இதைத் தவிர வேறு வழியில்லை" என்று கூறி வற்புறுத்த குரல் ஓட்டெடுப்பு மூலம் ஒருமனதாக மசோதா நிறைவேறியிருக்கிறது.

மசோதா நிறைவேறியதைத் தொடர்ந்து, திருச்சி சிவா அவர்கள் "சமூகத்தில் திருநங்கைகள் புறக் கணிக்கப்படும் நிலையில் அவர்களுக்கு எதிரான உடலியல் ரீதியான வன்முறைகள் மற்றும் கருத்து



# மாண்புறு மாநிலங்களவை மாமன்னர்

ரீதியான வன்முறைகள் அதிகரித்த நிலையில் இது போன்றதொரு மசோதாவை தாக்கல் செய்யும் முடிவுக்கு வந்தேன். இந்த மசோதாவை ஒருமனதாக நிறைவேற்ற ஒத்துழைத்த மேல்சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார்.

திருச்சி சிவா அவர்கள் அப்பழுக்கற்ற ஒரு அரசியல்வாதி. எளிமையானவர், ஆனால் வலிமை யாக தனது வாதத்தை மக்கள் அரங்கத்திலும், நாடாளுமன்ற அவைகளிலும் பேசுகின்ற திறன் கொண்டவர். நாட்டு மக்களுக்கு நலம் பயக்கும் வகையில் பலமுறை கருத்துரைகளை வழங்கி வென்றவர். அறிவுசார் சொத்துரிமைகள் பற்றி தெளிவானதொரு கருத்தைக் கொண்டவர். தனது தனிப்பட்ட வாழ்விலும் ஒழுக்கசீலராகத் திகழ்பவர். ஒவ்வொரு ஆண்மகனும் தத்தமது இணையரோடு (மனைவி) எப்படி வாழ்ந்திட வேண்டும் என்று, அவரது துணைவியார் தவறிய பின், அவர் தனது உள்ளக்கிடக்கையை வெளியே அள்ளிக் கொட்டி யிருக்கிறார். சமுதாயத்தின்பால் அக்கறை கொண்ட திருச்சி சிவாவைப்போன்ற நல்ல மனிதர்களால் மக்களவையும் மாநிலங்களவையும் நிரப்பப்பட வேண்டும் என்பதுதான் சிறந்த குடிமக்களின் எதிர்பார்ப்பு!

# தெரிந்து கொள்வோமே!

மற்ற எந்த நாட்டு ரூபாய் நோட்டிலும் இல்லாத ஓர் அம்சம் இப்போது இந்தியா, ஸ்வீடன், இஸ்ரேல், நெதர்லாந்து ஆகிய நாடுகளின் ரூபாய் நோட்டுகளில் உள்ளது. இந்நாட்டு ரூபாய்களில் "பிரெயில்" முறையிலும் எண்கள் அச்சிடப்பட்டுள்ளது. இதன்மூலம் பார்வை இழந்தவர்களும் ரூபாய் நோட்டைத் தடவிப் பார்த்து அது எத்தனை ரூபாய் நோட்டு என்பதைக் கண்டுபிடிக்க முடியும்.

**தவிர்க்கப்பட்ட விபத்து**

ஒருமுறை இங்கிலாந்து நாட்டின் ராணியாக விக்டோரியா மகாராணி ரயில் பயணம் மேற்கொண்டார். ரயில் லண்டன் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. கடுமையான பனி பெய்து கொண்டிருந்தது. எனவே ரயில் டிரைவர் கவனமாக ரயிலை ஓட்டிக்கொண்டு வந்தார். அப்போது திடீரென மான் உருவம் தோன்றியது. தன் கைகளை அசைத்தது. அதைக் கண்ட டிரைவர் ரயிலை உடனே நிறுத்தினார். ரயிலை விட்டு இறங்கிச் சென்று பார்த்தார். யாரையும் காணவில்லை. கொஞ்ச தூரம் ரயில் தண்டவாளத்தில் நடந்து சென்று பார்த்தார். அங்கே மழையினால் ஒரு ஆற்றுப்பாலம் இடிந்து விழுந்து ரயில் தண்டவாளம் முழுமையாகக் காணாமல் போயிருந்தது. அதைக் கண்டு திடுக்கிட்டார்.

தம்மை எச்சரித்த உருவத்தைத் தேடினார். யாருமே தென்படவில்லை. டிரைவர் ரயிலுக்குத் திரும்பினார். ரயிலை பின்நோக்கிச் செலுத்த முடிவு செய்தார். தற்செயலாக முன்பக்கக் கண்ணாடியைப் பார்த்தார். அதில் ஒரு வண்டு இறந்துபோய் ஒட்டிக் கொண்டிருந்தது. அப்போதுதான் தன்னை எச்சரித்தது யார் என்பது புரிந்தது. வண்டு உயிருக்குப் போராடி தன் கால்களை அசைத்ததுதான் மான் உருவமாகத் தோன்றியது என்பதை உணர்ந்தார். அந்த வண்டை எடுத்துப் பத்திரமாக வைத்தார். மகாராணியின் உயிரைக் காத்த அந்த வண்டு பாடம் செய்யப்பட்டு பிரிட்டிஷ் மியூசியத்தில் வைக்கப்பட்டது.

**ஜி. அருள்குமார், மன்னார்குடி**

(நன்றி: தினமணி)




# மனைவியிடம் பேசுங்கள்! மனம் விட்டுப்பேசுங்கள்!!

திருச்சி சிவா. நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்

பன்னிரெண்டாம் வகுப்புப் படிப்பை பாதியோடு விட்டுவிட்டு பதினேழு வயதில் என்னை மணமுடித்து 32 ஆண்டுகள் வாழ்ந்து, 49 வயது முடியும் நேரத்தில் என்னை தனி மனிதனாக தத்தளிக்க விட்டு என் மனைவி போய் விட்டாள். அவளுடைய முழு ஒத்துழைப்பு வாழ விரும்பி நடத்திய போராட்டம் மருத்துவர்களின் முயற்சி இத்தனையும் மீறி இன்னும் வளர்ந்து நிற்கும் மருத்துவத்திற்கு கட்டுபடாத நோய் ஒன்று. எல்லோரையும் தோற்கடித்து விட்டு அவளை கொண்டு போய்விட்டது.

இதுநாள் வரை என் வாழ்வில் கடந்த காலத்தில் நான் செய்த அல்லது செய்யத் தவறிய எதையும் எண்ணி வருந்தியதேயில்லை. காரணம் எல்லாம் தெரிந்தே தெளிந்தே செய்ததுதான் ஆனால், ஒரு குற்ற உணர்ச்சி என்னை வாட்டி வதைக்கிறது.

வாழ்வின் எல்லா நிலைகளிலும் வசந்தம் எட்டிப் பார்க்காத ஆரம்ப காலத்திலும் வளம் குறைந்திருந்த நாட்களிலும் மகிழ்ச்சியோடு என்னோடு வாழ்ந்தவள் அவள் பொன்நகைகளை கழட்டிக் கொடுத்து விட்டு புன்னகையோடு மட்டும் வலம் வந்த நாட்கள் உண்டு.

அரசியல் வெப்பம் தகித்த போதும், தனிமனித வாழ்வின் துன்பங்கள் சூழ்ந்தபோதும் என் அருகே ஆறுதலாய் ஆதரவாய் இருந்தவள் எந்த நிலையிலும் தலை தாழ்ந்து வாழ்ந்திட கூடாது என்கின்ற என் குணத்திற்கு இணைந்து இணைந்து நடந்தவள்.

சுயமரியாதையைக் காப்பதில் என்னையும் தாண்டி நின்றவள் மூன்று குழந்தைகளும் பிறக்கும் நேரத்தில், இடைதேர்தல் பணி, பிரச்சாரப்பணி, போராட்டங்கள் என்று அருகே இருக்காமல் சுற்றிக்கொண்டு இருந்தபோது சிறிதும் முகம் சுழிக்காதவள்.

என் கண்கள் உன்னை தேடுகின்றன என்று கலைஞர் எழுதிய கடிதம் உங்களுக்காகவே எனச் சொல்லி...நிறைமாத கர்ப்பிணியாக இருந்தும் என்னை பெரியகுளம் இடைத்தேர்தலுக்கு அனுப்பிவிட்டு செப் 17ஆம் தேதி குழந்தை பிறந்து இரண்டு நாட்கள் கடந்து 19ஆம் தேதி நான் பார்க்க வந்தபோது, ஒரு சிறிதும் முகம் சுழிக்காமல், ஒரு மணி நேரத்திலேயே என்னை மீண்டும் தேர்தல் களம் அனுப்பி வைத்த, கற்பனை செய்ய முடியாத குணம் கொண்ட குலமகள். இரண்டாவது குழந்தை பிறந்து மருத்துவமனையில் இருந்து நேராக, அப்போது ஒரு போராட்டத்தில் கலந்து கொண்டு போலீஸ் நிலையத்தில் காவலில் இருந்த இடத்தில் பிள்ளையை காட்டிவிட்டு பத்திரமாக இருங்கள் என்று சொல்லி விட்டுப் போன இலட்சியவாதியின் சரியான துணை.

விருந்தோம்பல், உபசரிப்பு, இன்முகம். என்னைக் காண வருவோர் அத்தனை பேருக்கு அன்னபூரணி... இரவு இரண்டு மணிக்கு எழுந்து சுடச்சுட தோசையும், குளிர்சாதனப் பெட்டியில் வைத்த பழைய துவையலை ஒதுக்கி, புதிதாக அரைத்து பசியாற்றி பின்னர் சுருண்டு உறங்கும் அன்பு தெய்வம். தாய் போன துயரம் தெரியாமல் தாயின் இடத்தையும் நிரப்பி, ஒருபொழுதும் எதன் பொருட்டும் முகம் வாடுவது பொறுக்காமல் துடிக்கும் உள்ளம் கொண்ட உத்தமி.

பொது வாழ்க்கையில் நான் நெறி பிறழாமல் நடப்பதற்குப் பெரிதும் துணையாய், ஊக்கமாய், பக்கபலமாய், இருந்தவள். பண்டிகைகளும், திரு நாள்களும், கோலாகலமாய், கூட்டம் கூட்டமாய் கொண்டாடுவதற்கு அவள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும் காட்டும் ஆர்வமும் அளவிடற் கரியவை.

இத்தனை கருத்துக்களை அவள் மீது நான் கொண்டிருந்ததை ஒருநாளும் வாய்விட்டு வார்த்தையில் சொல்லியதேயில்லை.

ஆண்செருக்கு என்பார்கள், நிச்சயமாக அது இல்லை. இருந்திருந்தால் இந்த உறுத்தல் வந்துருக் காது. நேரம் இல்லை என்பார்கள், பொய் 32 ஆண்டுகளில் பத்து நிமிடம் கூடவா கிடைக்காமல் போயிருக்கும் தானாகவே புரிந்து கொள்வார்கள் என்பார்கள், அப்படி என்றால் மொழி எதற்கு? மொழியின் வழியில் ஒரு பொரு ளுக்கு பல சொற்கள் எதற்கு? பேசுவதற்கு தானே? உயர்த்துவ தற்குதானே? ஒரு சொல் ஓராயிரம் புரியவைக்குமே.

காலம் கடந்து பயன்படுத்தினால் பயனற்றுப் போவது பதார்த்தங்கள் மட்டுமா? வார்த்தைகளும் தானே.

சரியான நேரத்தில் வெளிபடுத்தாவிட்டால் மன்னிப்பு, நன்றி, காதல் என்ற எந்த சொல்லுக்கும் உயிர் இருக்காது. விலையும் இருக்காது இத்தனை கற்றும் கடமை தவறியதாகவே கருதுகிறேன்.

ஒருநாள், ஒரே ஒரு தடவை தனியாக அவளிடம் உன்னால் தான் உயர்வு பெற்றேன் என்று கூட அல்ல உன்னால்தான் இந்த பிரச்சனை தீர்ந்தது. உன் துணைதான் இந்த துன்பமான நேரத்தைக் கடக்க வைத்தது. உன் ஆலோசனைதான் என் குழப்பத்திற்கு தீர்வு தந்தது. என் வேதனையை பகிர்ந்து கொண்டு என்னை இலேசாக்கினாய் என்று ஒரு முறையாவது கூறியிருந்தால் எவ்வளவு மகிழ்ந்திருப்பாய். கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தாலும் கிடைக்காத உற்சாகத்தை அடைந்திருப்பாயே.

ஊட்டிக்கு பொதுக்கூட்டத்திற்கு சென்றிருந்த நேரத்தில் அவளின் உடல் நலம் மோசமடைந்ததாகச் செய்தி கிடைத்தது வரும் வழியெல்லாம் இப்படியே யோசித்து, இன்று அவளிடம் எப்படியும் உள்ளத்தை திறந்து இத்தனைநாள் சேர்த்து வைத்திருந்ததை எல்லாம் கொட்டிவிட வேண்டும் என்று வந்து பார்த்தால் முற்றிலும் நினைவிழந்து மருத்துவமனையில் படுத்திருக்கிறாள்.

நினைவு திரும்ப வாய்ப்பேயில்லை என மருத்துவர்கள் உறுதியாக சொன்னபிறகு மெல்ல அவள் காதருகே குனிந்து, மும்தாஜை ஷாஜகான், தாஜ் என்று தனிமையில் அழைத்ததைப் போல, தேவி காராணியை, "தேவி" என அழைத்தபோது, மூன்றாவது அழைப்பில் மருத்துவத்தை கடந்த

அதிசயமாக புருவங்கள் இரண்டும் என்ன என்று கேட்பது போல மேல உயர்ந்து வலது விழியோரம் ஒரு துளி கண்ணீர் உருண்டோடிய போது நான் உடைந்துபோனேன்.

பேசியிருக்க வேண்டிய நாட்களில் மனதில் கொள்ளையாய் இருந்தும் பேசாமலே வீணாக்கி உணர்வுகள் இழந்து கிடந்தவளிடம் அழுது, இன்று அவள் படத்திற்கு முன் உட்கார்ந்து கதறுகிறேன். வருகிறவரிடமெல்லாம் அவள் உயர்வுகளை நாளெல்லாம் உணர்கிறேன்.

ஒரே ஒருமுறை அவள் கம்பீரமாய் உலவிய நாட்களில் உட்கார வைத்துப் பேசி இருந்தால்...இவர் நம்மை முழுதாக புரிந்து கொண்டாரோ இல்லையோ என்ற குழப்பத்திலேயே போய் இருப்பாளோ என்று நாளும் துடிக்கிறேன்...

எனக்கு ஆறுதல் கூறவந்த திரு.இ.வி.கே.எஸ். இளங்கோவன், "வருத்தப்படாதீர்கள் இதெல்லாம் அவர்களுக்கு சொல்லாமலே புரிந்திருக்கும்" என்று சமாதானப் படுத்தினார்.

நான் அவரிடம் கேட்டேன், நீங்களோ நானோ பொதுக்கூட்டத்தில் பேசுகிறபொழுதே நம்முடைய பேச்சு சிறப்பாக இருந்ததா இல்லையா, என்பதை கூட்டத்தில் எழும் கரவொலி மூலம், முகக்குறிப்பின் மூலம் ஆதரவாளரின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆனாலும் நிகழ்ச்சி முடிந்து காரில் ஏறியவுடன் உடன் பயணிப்பவர்கள் அந்த உரைகுறித்து ஏதாவது சொல்லவேண்டும் என ஏன் எதிர்பார்க்கிறோம்.

பாராட்டினால் பரவச மடைகிறோம். அதுபற்றி எதுவுமே பேசாமல் கூட வருபவர்கள் அமைதி காத்தால் கோபம் கொள்கிறாமே ஏன்?

அது போலத்தான் வீட்டில் இருக்கிற பெண்களும். தங்கள் செயல்களுக்கும் சேவை களுக்கும் பணிகளுக்கும் ஒரு வார்த்தை அன்பாக, கனிவாக, பாராட்டுச் சொல்லாக கணவன் சொன்னால் மகிழ்வார்கள். இதில் நாம் இழப்பது எதுவுமே இல்லையே எனச் சொன்னேன்.

அவள் படத்தை பார்க்கிறபோதெல்லாம் நெஞ்சிலே இருந்து ஏதோ ஒன்று கிளம்பி கண்களில் நீராய் முட்டுகிறது காலங்கடந்து நான் உணர் கிறேன்.

தோழர்களே! தயவு செய்து மனைவியிடம் பேசுங்கள், அவர்களின் துணையினை, அன்பினை, பொறுப்பினை, பொறுமையினை, பெருமையினை வாய்விட்டு வார்த்தைகளால் சொல்லுங்கள்.

என் மனைவிக்கு என்னை உணர்த்தாமலே, என் உள்ளத்தை திறக்காமலே, பேச்சையே தொழிலாக கொண்டவன் பேசி, மகிழ வைக்காமலேயே அனுப்பி வைத்த கொடுமை இனி வேறெங்கும் நிகழவேண்டாம்.

வேண்டி கேட்கிறேன் உங்களுக்காகவே, உங்கள் பிள்ளைகளை, உங்கள் பிரச்சனைகளை, உங்கள் உறவுகளைச் சுமந்து, உங்கள் தேவைகளைப் புரிந்து, தீர்த்து, எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டு, பொருள் தேடி, புகழ் தேடி, நாம் வெளியே சுற்றுகிற போதெல்லாம் காவல் தெய்வமாய் குடும்பத்தைக் காக்கும் அந்த பெண்களைப் புரிந்து கொண்டோம் என்பதன் அடையாளமாய் அங்கீகாரமாய் நாலு வார்த்தைகள் தயவு செய்து பேசுங்கள்!!

நான் சந்தித்து கேட்டவர்களில் 95 விழுக் காட்டினர் என்னைப் போலவே பேசுவதில்லை என்றே சொன்னார்கள். இது மாறட்டும்.. என் மனைவியின் பிரிவு தரும் வேதனையை விட இந்த உறுத்தல் தரும் வேதனை மிக அதிகமாக இருக்கிறது. என் அனுபவம் சிலருக்காவது உதவட்டும் என்றே இதை எழுத முனைகிறேன். சில வீடுகளாவது நிம்மதியில் மகிழ்ச்சியில் நிலைக்கட்டும்.

என் வேதனை நான்படும் துயரம்...வேறெவர்க்கும் எதிர்காலத்தில் வேண்டாம்.. அவளோடு வாழ்ந்த நாட்களின் இனிமையான தருணங்களின் நினைவுகளே துணையாக அந்த நினைவுகளே சுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்...

இதனை இப்போது சொல்லும் நான், வாழ்ந்த நாட்களில் ஒரு நாள் கூட வாய்விட்டு வார்த்தை களில் ஒருமுறை கூட சொன்னதில்லை...


◆

# மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

தமிழுக்காகவே தன்னை தியாகம் செய்தவர் தமிழ், ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம் உள்பட 23 மொழிகளை கற்றறிந்தவர் அவர்தான் மொழிஞாயிறு தேவநேய பாவாணர். திருநெல்வேலி மாவட்டம் சங்கர நயினார் கோவில் என்றழைக் கப்படும் சங்கரன்கோவிலில் 7.2.1902ல் பிறந்தவர். தந்தை ஞானமுத்து, தாயார் பரிபூரணம் அம்மை யார். இவர்களுக்கு 10 பிள்ளைகள், 6 பெண்கள், 4 ஆண்கள். இவர்களில் 10வது பிள்ளை தான் பாவாணர்.

தமிழ்ப்புலமைக்காக 1924ஆம் ஆண்டு மதுரை தமிழ்ச்சங்க பண்டிதர், 1926ஆம் ஆண்டு திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச் சங்க புலவர், சென்னை பல்கலைக்கழக வித்துவான் ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

பாவாணர் தனது வாழ்நாள் பயனாக செந்தமிழ் சொற் பிறப்பியல் அகரமுதலியை தொகுக்க முயற்சிகள் மேற்கொண்டார். ஆனால், அதற்கான பண வசதி அவரிடம் இல்லை.



தமிழக அரசு அதற்கான ஒரு துறையை ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை எழுந்தது. தமிழக முதல் அமைச்சராக கருணாநிதி (1974) இருந்த காலத்தில், செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்கம் தொடங்கப் பட்டது. பாவாணர் அதன் இயக்குனராக அமர்த்தப் பட்டார். தமிழ் அவரை உயர்த்தியது.

5.1.1981 அன்று முதல்அமைச்சராக எம்.ஜி.ஆர். இருந்த காலக்கட்டத்தில் மதுரையில் 5ஆம் உலகத் தமிழ் மாநாடு நடந்தது. அதில் பாவாணருக்கு பேசும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

அப்போது அவர், உலக மொழிக்கெல்லாம் முதன் மொழி தமிழே. தமிழனே உலகின் முதல் மாந்தன். மாந்தன் பிறந்தகம் (மனிதன்) குமரிக்கண்டமே. தமிழ் மொழியை கடன் பெற்றே சமசுகிருதம் உருவானது. ஆனால், இன்று அது ஆதிக்கம் செலுத்துகிறது. பிறமொழி கலப்பு தமிழை அழிக்கிறது. இதெல்லாம் எதனால் என்றால், தமிழன் அந்த அளவுக்கு அடிமையாகி போன தால்தான்.

இதை நாம் தடுத்தே ஆகவேண் டும்..தடுத்தே ஆக வேண்டும் என முழங்கியவர் நெஞ்சை பிடித்தபடி மேடையிலேயே சரிந்தார். மதுரை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பாவாணர் சிகிச்சை பலனின்றி 1981ஆம் ஆண்டு 16ஆம் தேதி மறைந்தார்.

அவரது நினைவாக மதுரைசாத்தமங்கலத்தில் தேவநேய பாவாணருக்கு மணிமண்டபம் கட்டப் பட்டு, அதை 30.10.2007 அன்று அப் போதைய முதல் அமைச்சர் கருணாநிதி திறந்து வைத்தார்.

பாவாணரின் மனைவி எஸ்தர் குழந்தை பெற்று சிறிது காலத்தில் உயிரிழந்தார். தனிமையில் தவித்த அவருக்கு ஆம்பூரில் வசித்த சகோதரியின் மகள் நேசமணியை 2ஆம் திருமணம் செய்து வைத்தனர். பாவாணருக்கு, 5 மகன்கள், ஒருமகள். அவர்கள், நச்சினார்க்கினிய நம்பி, சிலுவையை வென்ற செல்வராசன், அருங்கலை வல்லான் அடியார்க்கு நல்லான், மடந்தவிர்த்த மங்கையர்க்கரசி, மணிமன்ற வாணன், பைந்தமிழ் வளர்த்த பாண்டியன் ஆகியோர் ஆவர்.

தற்போது மணிமன்றவாணன் சென்னை கே.கே.நகரில் உள்ள பாவாணர் இல்லத்தில் வசித்து வருகிறார். மகள் மடந்தவிர்த்த மங்கையர்க்கரசியும் சென்னையில் வசிக்கிறார்.

மற்றவர்கள் அனைவரும் காலஞ்சென்று விட்டனர். 2வது மகன் சிலுவையை வென்ற செல்வராசன் சேலத்தில் ஆசிரியராக பணியாற்றி வந்தவர், 2005ஆம் ஆண்டு காலமனார். அவரது மனைவி, அதாவது பாவாணரின் மருமகள் செயின் செல்வராசன். ஆசிரியையாக வேலை பார்த்து ஓய்வு பெற்றார்.


இவர்களுக்கு காலேப் ஜெயரா என்ற மகன், கண்மணிதேவமலர், எஸ்தர் செல்லமணி என்ற 2 மகள்கள்.

தற்போது சேலம் அஸ்தம்பட்டி அடைக்கல நகரில் பாவாணரின் மருமகள் செயின்செல்வராசன் ஒட்டு வீடு ஒன்றில் வாடகைக்கு தனது மகன் காலேப்ஜெயராசு, மருமகள் விமலாபிரேமகுமாரி, பேரன் யாபேஸ் செல்வராசு, பேத்தி ஈவிலின்ஜெபா ஆகியோருடன் வசித்து வருகிறார்.

செயின் செல்வராசனுக்கு 77 வயது. தனக்குவரும் ஓய்வூதியத் தில் குடும்பம் நடத்தி வருகிறார். மகன் காவலாளி யாக வேலைபார்த்து வருகிறார்.

**உமா மகேசுவரி**

## தமிழ் அறிஞர்
## திரு. தேவநேய பாவணர்



இவருக்கு மொத்தம் 81 மொழிகள் தெரியும்.

இவர் தன் ஆராய்ச்சியின் மூலம் என்ன சொல்கிறார் தெரியுமா?

“உலகின் அனைவரும் வியப்பாக திரும்பி பார்க்கும் மொழி தமிழ்தான் தமிழ் மொழியை போல் சிறப்பானது எதுவும் இல்லை.

தன் மக்களாலும் வேற்று இன மக்களாலும், அனைத்து தரப்பிலும் துரோகம் செய்யப்பட்டு வரும் மொழி தமிழ்தான்.

இதுவே வேறு மொழிக்கு நடந்திருந்தால் அது இன்று உரு தெரியாமல் அழிந்து போயிருக்கும்..”

“உலகின் முதல் மொழி தமிழ்

உலகின் முதல் மனிதன் தமிழன்.

அவன் பிறந்த இடம் குமரி கண்டம்.

தமிழ் திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய்.

தமிழ் வட மொழிகளுக்கெல்லாம் மூல மொழி”.

*மொழி ஞாயிறு தேவநேய பாவனார்*
*(தமிழ் வேர்ச்சொல் ஆய்வாளர்).*

**– தமிழினி**

கடவுள் கழுதையைப் படைத்து அதனிடம் சொன்னார். “நீ கழுதையாகப் பிறந்து நாள் முழுவதும் பொதி சுமப்பாய் உனக்கு சிந்திக்கும் திறனே கிடையாது புல்லைத் தின்று 50 ஆண்டுகள் வாழ்வாய்“ என்றார்.

கழுதையாகப் பிறந்து 50 ஆண்டுகள் வாழ விருப்பமில்லை. 20 ஆண்டுகளே போதும் என்றது கழுதை. அப்படியே ஆகட்டும் என்றார் கடவுள்

கடவுள் நாயைப்படைத்து அதனிடம் சொன்னார்: “நீ மனிதனின் வீட்டை பாதுகாத்து அவனுக்கு நல்ல நண்பனாய் இருப்பாய் மனிதன் தரும் மிச்ச மீதிகளை உண்டு 30 ஆண்டுகள் வாழ்வாய்“ என்றார்.

30 ஆண்டுகள் எனக்கு அதிகம் 15 ஆண்டுகளே போதும் என்றது நாய். கடவுள் அப்படியே ஆகட்டும் என்றார்.

கடவுள் குரங்கைப் படைத்து அதனிடம் சொன்னார், “நீ மரங்களில் கிளைக்கு கிளை தாவி குழந்தைகளை மகிழ்விப்பாய் 20 ஆண்டுகள் உயிர் வாழ்வாய்“ என்றார். எனக்கு 10வருடங்களே போதும் சாமி என்றது குரங்கு. கடவுள் அப்படியே ஆகட்டும் என்றார்.

கடவுள் மனிதனைப் படைத்தார். “நீ சிந்திக்கும் ஆற்றலுடன் பிறப்பாய். உன்

அறிவைப் பயன்படுத்தி எல்லா உயிர்களையும் உன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவாய் 20 ஆண்டுகள் உயிர் வாழ்வாய்“ என்றார்.

மனிதனோ “சாமி 20 வருடம் எனக்கு ரொம்பக் குறைவு. கழுதை வேண்டாமென்று சொன்ன 30 வருடங்களையும். நாயின் 15 வருடங்களையும் குரங்கின் 10 வருடங்களையும் எனக்குத் தாருங்கள்“ என்றான். கடவுள் அப்படியே ஆகட்டும் என்றார்.

அன்றிலிருந்து மனிதன் 20 வருடங்கள். மனிதனாகவும் பின் திருமணம் செய்து 30 ஆண்டுகள் கழுதையைப் போல குடும்பப் பாரம் சுமந்தும் குழந்தைகள் வளர்ந்தபின் 15 ஆண்டுகள் நாயைப் போல வீட்டைப் பாதுகாத்தும் கடைசிப் பத்து வருடங்கள் குரங்கைப் போல தன் ஒவ்வொரு மகன் அல்லது மகள் வீடு சென்று பேரக் குழந்தைகளை மகிழ்வித்துக் கொண்டிருக்கிறான்!

# ஒரு குட்டிக் கதை





தமிழீழப் பாவேந்தர் காசிஆனந்தன்




6

# தாயகத்தின் பெயர் சொல்ல இயலாத தமிழீழம்

காசுமீரில் பிற மாநிலத்தவர்கள் நிலம் வாங்க முடியாது குடியேற முடியாது என்னும் மண்காப்புச் சட்டம் உண்டு. அச்சட்டத்தின் மூலம் அவர்கள் பிற தேசிய இனங்களின் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்களின் தாயகத்தைச் சிங்கள இனவெறியர்களின் குடியேற்றத்தில் இருந்து தடுக்க இப்படி ஒரு சட்டம் இல்லை. ஒவ்வொரு நொடியும் அவர்கள் தங்கள் தாயகத்தை இனவெறிச் சிங்களரிடம் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் மொழிவழித் தேசிய இனங்களுக்கு உள்ள சில வாய்ப்புகள் கூட இலங்கையில் தமிழீழ மக்களுக்கு இல்லை.

பெரும்பான்மைத் தேசிய இனத்தவர்களான இந்திக்காரர்கள் மட்டுமல்ல பிற தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களும் இந்தியாவின் தலைமை அமைச்சராக குடியரசுத் தலைவராக வரும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள்.

இலங்கையில் என்றேனும் தமிழர்கள் தலைமை அமைச்சராக குடியரசுத் தலைவராக வர இயலுமா? சொல்லுங்கள்.

இந்தியாவில் ஒரு தமிழர் உயர் படைத்தலைவராக வரும் வாய்ப்பு இருக்கிறது. இலங்கையில் உண்டா?

இந்தியாவின் கூட்டாட்சி அரசியல் அமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் தமிழ் நாட்டுக்குப் போதாது என்றும் தன்னாட்சி வேண்டும் என்றும் போராடும் கட்சிகள் இயக்கங்கள் தமிழ்நாட்டில் இன்றும் உண்டு.

ஆனால்

தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் கூட தமிழீழத்துக்கு இல்லையே என்பதைத்தான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தியா தன் அரசியல் அமைப்பின் கீழ் தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளையாவது தமிழீழத்துக்குப் பெற்றுத்தர இதுவரை முயலவில்லையே ஏன்?

தன் கூட்டாட்சி அரசியல் அமைப்பின் கீழ் மொழிவழி மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் கொத்துக்குண்டுகளையும் நச்சுக் குண்டுகளையும் இந்தியவான்படை கொண்டு வீசாத தமிழ்நாட்டு மக்களை ஆயிரம் ஆயிரமாய்க் கொன்று குவிக்காத ஏதிலிகளாய்ப் பிற நாட்டுக்கு ஓட விரட்டாத தமிழ்நாட்டுப் பெண்களை இந்தியப்படை கொண்டு பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தாத இந்திய அரசு தன் ஆட்சியின் கீழ் உள்ள தமிழ்நாட்டுக்கும் சிறீலங்கா ஆட்சியின் கீழ் உள்ள தமிழீழத்துக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டு மக்கள் இந்திய அரசியல் அமைப்பின்கீழ் பெற்றிருக்கும் ஓரளவு உரிமை களும் பாதுகாப்புமாவது தமிழீழ மக்களுக்கு உண்டா?

உதவாத தீர்வுத் திட்டங்களைத் தந்து சிங்கள இனவெறி அரசு தமிழீழ மக்களை முற்று முழுதாக ஒழித்துக் கட்ட இந்திய அரசு உதவலாமா?

அறுந்த பழஞ்செருப்பிலும் இழிவான அழுகிய சாக்கடையிலும் கரிவான 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை தமிழீழ மக்களுக்குத் தீர்வுத் திட்டமாக அளித்தீர்கள். அளித்தீர்களா? எங்களை அழித்தீர்கள்.

### தாயகத்தின் பெயர் சொல்ல இயலாத தமிழீழம்

பழம் பெரும் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் காலம் கி.மு.500 என்றிருந்ததைத் திருத்தி கி.மு.5000 ஆக இருந்திருக்க வேண்டும். கி.மு.10,000 அதின் காலமாக இருப்பதற்கும் சான்றுகள் உண்டு என ஆய்வறிஞர் குணா தன் தொல்காப்பியர் காலம் பற்றிய ஆய்வு நூலில் பதிவு செய்துள்ளார்.

தமிழ்கூறும் நல்லுலகம் என்றே தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனார் பாடிய பாயிரத்தில் தமிழ்நாடு அழைக்கப்படுகிறது

தமிழ்நாடு என்னும் பெயர் கொண்டு பண்டை நாளில் தமிழ்நாடு இருந்ததில்லை. ஆனால் தமிழர் தாயகமாகத் தமிழ்நாடு இருந்தது.

சேரநாடு சோழநாடு பாண்டியநாடு என்றெல்லாம் பிரிந்து தொடக்க காலத்திலும் பல்லவநாடு தொண்டை நாடு கொங்கு நாடு என்றெல்லாம் சிதறிப் பிற்காலத்திலும் தமிழ்நாடு சீரழிந்தது.

1956இல் தான் இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் அமைந்தபோது தமிழ்நாடு உருவா யிற்று. இருப்பினும் சென்னை மாநிலம் என்றே அது அழைக்கப்பட்டது. 1968இல்தான் அறிஞர் அண்ணா தமிழ்நாடு எனத்தமிழர் தாயகத்துக்குப் பெயர் சூட்டினார்.

பண்டை நாளில் சிங்களவரின் மண்ணும் சிறீலங்கா என்னும் பெயர் கொண்டிருக்கவில்லை. கி.பி.6ஆம் நூற்றாண்டில் மகாநாம தேரர் என்னும் புத்த துறவியால் பாலி மொழியில் எழுதப்பட்ட மகாவம்சம் என்னும் புனைகதையில் லங்கா என்னும் பெயர் வருகிறது.

இலங்கையில் பிற்காலத்தில் கண்டி அரசு கோட்டை அரசு என்னும் பெயர் கொண்ட இரு அரசுகளே சிங்களவரின் தாயகமாய் இருந்தது.

1972இல் சிங்கள இன வெறியர்களால் குடியரசு அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டபோதே சிங்களவர் தாயகம் சிறீலங்கா என்னும் பெயர் தாங்கிற்று.

இருப்பினும்

தமிழர் தாயகம் உள்ளிட்ட முழு இலங்கைத் தீவையுமே அவன் சிறீலங்கா எனத் தன்பாட்டுக்குப் பெயரிட்டு மகிழ்ந்தான்.

ஆனால்

உண்மையில் தமிழீழமே தமிழர் தாயகமாகும். இலங்கைத் தீவு முழுவதும் ஒரு காலத்தில் தமிழர் தாயகமாக இருந்தாலும் சிங்கள மொழியும் இனமும் தோன்றி, அவர்களுக்கெனத் தனியான ஒரு தாயகம் உருவானபின் இலங்கையின் வடக்கு கிழக்கு இணைந்த பெருநிலப்பரப்பே பண்டை ஈழத்தின் சொந்தக்காரர்களான தமிழர்களின் தாயகமாய் விளங்கிற்று. இத் தமிழர் தாயகமும் முன்னால் தமிழீழம் என அழைக்கப்படவில்லை. யாழ்ப்பாண அரசு என்றே அழைக்கப்பட்டது.

வடக்கில் இருந்த பண்டார வன்னியனின் வன்னி அரசும், கிழக்கில் விளங்கிய குளக்கோட்டன் மாகோன் உலக நாச்சி யார் ஆடக சவுந்தரி புலியன் போன்ற அரசர் அரசியர் சிற்றரசுகளும் தமிழர் தாயகமேயாகும்.

ஈழம் என்னும் முழு இலங்கைத் தீவுக்குமான பண்டைத் தமிழ்ப் பெயர் கி.மு.2.ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பட்டினப்பாலையில் இடம்பெற்றிருப்பதைப் பார்க்கிறோம். சங்ககாலப் புலவராக ஈழத்துப் பூதன்தேவனாரையும் வரலாற்றில் சந்திக்கிறோம். இருப்பினும் ஈழம் என்னும் சொல் பிற்காலத்தில் வழக்கிழந்து போயிற்று என்பதே உண்மை.

1972இல் தந்தை செல்வா தன் தமிழரசுக் கட்சியோடு ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் தமிழ்ப் பேராயக் கட்சியையும் தொண்டைமான் அவர்களின் இலங்கைத் தொழிலாளர் பேராய அமைப்பையும் இணைத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணியை நிறுவியபோது தமிழீழம் என்னும் சொல் தமிழர் தாயகத்தின் பெயராகப் பயன்படுத்தப் பட்டது.

1976இல்தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டில் தனித்தமிழீழ அரசு குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதுதான் தமிழர் தாயகத்தின் பெயராகத் தமிழீழம் நிலை பெறலாயிற்று.

நான் மேலே காட்டிய சான்றுகளின் அடிப் படையில் உங்களிடம் ஒரே ஒரு கேள்வியை நான் முன் வைக்கிறேன்.

இன்று

தொடரும்...



## Do we know actual full form of some words?

News paper =

North East West South past and present events report.

Chess =

Chariot, Horse, Elephant, Soldiers.

Cold =

Chronic Obstructive Lung Disease.

Joke =

Joy of Kids Entertainment.

Aim =

Ambition in Mind.

Date =

Day and Time Evolution.

Eat =

Energy and Taste.

Tea =

Taste and Energy Admitted.

Pen =

Power Enriched in Nib.

Smile =

Sweet Memories in Lips Expression.

Bye =

Be with you Everytime.

**-Ranjith**

## தெரிந்து கொள்க!

பெண்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் உடல் மற்றும் மனநலம் குறித்த பிரச்னைகளை சந்திக்க வேண்டியுள்ளது. குறிப்பாக 13வயதில் பெண்கள், சுய சுகாதாரம், ஆரோக்கிய உணவு, உடற்பயிற்சி (விளையாட்டு) போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

13வயது முதல் 18வயது வரையுள்ள பெண் குழந்தைகளை மிகவும் பக்குவமாக கையாள வேண்டும். இந்த வயதில் மிகக்குறைந்த அல்லது அதிக உடல்எடை, பிறப்புறுப்பு பிரச்னைகள், சிறுநீரக பாதை கோளாறுகள், பூப்படைதலில் கோளாறுகள் என பல பாதிப்புகளை சந்திக்க நேரிடும். எனவே இந்த வயதில் சமூகத்தில் பெண்ணுக்குள்ள முக்கியத்துவத்தை உணர்த்தி ஆணுக்கு பெண், நிகரானவள் என்பதை உணர்த்த வேண்டும். மாதவிடாய் சுழற்சி ஆரம்பிக்கும் காலம் என்பதால் பெற்றோர் குழப்பத்தில் இருப்பார்கள். பூப்படைந்தது முதல் இரண்டிலிருந்து மூன்று வருடங்களுக்கு மாதவிடாய் சுழற்சி இருக்காது என்பதை நாம் உணரவேண்டும்.

19வயது முதல் 39வயது வரை திருமணம் மற்றும் குழந்தை பேறு உட்பட வாழ்வின் முக்கிய திருப்பங்கள் நடக்கும் காலகட்டமாகும். இந்த காலகட்டத்தில் கர்ப்பம் தரிக்க திட்டமிட்ட 3மாதங்களுக்கு முன்பாகவே விட்டமின் மருந்தை, டாக்டர்களின் ஆலோசனைப்படி உண்ணவேண்டும். இது குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு முக்கியம். மகப்பேறு காலத்தில் உரிய பயிற்சி பெற்ற டாக்டரிடம் காண்பித்து, பிரச்னைகளை ஆரம்பநிலையில் கண்டறிந்து சரிசெய்ய வேண்டும்.

40முதல் 65வயதுக்கு உட்பட்ட நிலையில் இருக்கும் பெண்கள், மாதவிடாய் சுழற்சி நிற்கும் தருவாயில் இருப்பதால் உடல் மற்றும் மனநல கோளாறுகளுக்கு ஆளாகின்றனர். அதை உணர்ந்து உணவு கட்டுப்பாடு, அதிக சர்க்கரை தவிர்ப்பு, உணவில் சோயா மற்றும் கால்சியம், உடற்பயிற்சி யில் ஈடுபடவேண்டும்.

65வயதுக்கு மேல் உள்ள பெண்களுக்கு குடும்பத்தினரின் துணை மிகவும் அவசியம். புற்று நோய்க்கான அபாயம் அதிகம் இருக்கும் காலம் இது. எனவே கர்ப்பபை சம்மந்தமான சிறிய சந்தேகத்தையும் டாக்டரிடம் கேட்டு, பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

தன்வாழ்வின் பெரும் பகுதியை குடும்பத்திற்காக செலவிடும் பெண்ணின் ஆரோக்கியத்தை பேணிக்காப்பது வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லது. எந்த குடும்பத்தில் பெண்கள் உடலளவி லும், மனதளவிலும் மகிழ்ச்சியாக இருக்கிறார் களோ அந்த குடும்பத்தில் நிம்மதியும், சந்தோஷமும் நிலைத்திருக்கும் என்பது மட்டும் உண்மை.

M.Srinivasan

9841634855
9941011382




Old No.27,New No.24, Ground Floor, Sarojini Street, Chennai - 600 017 | Tamil Nadu, India
Email : msshree63@yahoo.in | msshree63@gmail.com| Web : www.msshree.com

AKBAR PONNANI
Kerala Manthrigam

Ali Akbar Haji. செல்: 9840551221
போன் : 044 24807611/24812029



குடும்பத்தில் உள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும், வீடு சம்பந்தமான பிரச்சினைகளுக்கும், கணவன்-மனைவி ஒற்றுமை நிலவ, குழந்தை பாக்கியம் பெற, குழந்தைகளுக்கு தோஷம் விலக, காணாமல் போனவர்கள் கிடைக்க, திருமணத் தடை நீங்க, குடிப்பழக்கம் அகல, கால் எரிச்சல், கால் வலி, மூட்டு வலி, இடுப்பு வலி, நெஞ்சு படபடப்பு, நெஞ்சு வலி, கழுத்து வலி, தலை பாரம், தூக்கமின்மை, ரகசிய நோய் போன்ற அனைத்து வியாதிகளுக்கும் நிவாரணம் பெறவும், வியாபாரம் செழிக்க, தொழில் சம்பந்தமான பிரச்சினை, வெளிநாட்டு பயணத் தடை நீங்க, கைவிஷம் எடுக்க, வாதத்தால் கைகால் இழந்தவர்களுக்கு, சூனியத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பேய், பிசாசுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், குழந்தைகளுக்கு மறதி நோய் விலக போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் அணுகவும்.

ஞாயிறுதோறும்
கூட்டுப்பிரார்த்தனை
நடைபெறும்

இன்ஷா அல்லாஹ்
எல்லா மாதமும் கடைசி வியாழன்
ஷைக் முஹயத்தீன்(ரஹ்) அவர்களின் குத்துபியத் நடைபெறும்

காலை 9 மணி முதல்
மாலை 4 மணி வரை

#10/14, வெள்ளாளர் தெரு, பெஸ்ட் ஆஸ்பத்திரி அருகில், கோடம்பாக்கம், சென்னை 600024.

## தெரிந்து கொள்க!

ரோலர் கோஸ்டர்சில் பயணம் செய்பவர்களுக்கு மூளையில் ரத்த அடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. நீல நிற கண்களை உடையவர்களுக்கு இருட்டில் மற்றவர்களைவிட பார்வைத்திறன் அதிகம்.

சிறிதளவு மதுவை தேளின் மீது விட்டால் போதும் அது மது மய்க்கமடைந்து இறந்து விடும். வெங்காயம் உரிக்கும் போது சூயிங்கம் மென்றால் கண்ணில் கண்ணீர் வராது.

வலது கைப்பழக்கம் உள்ளவர்கள், இடது கைப்பழ்க்கம் உள்ளவர்களை விட சராசரியாக் 9 வருடங்கள் அதிகம் உயிர்வாழ்வர்.

ஒரு முறை புன்னகை புரிவதன் மூலம் குறைந்தபட்சம் 30 தசைநார்களுக்கு பயிற்சி கிடைக்கிறது. நமது மூக்கு உடலில் “ஏர் கண்டீசன்” போன்று செயல்படுகிறது, இது உடலுக்குள் குளிர்க்காற்றை வெப்பப்படுத்தி அனுப்புகிறது. வெப்பகாற்றை குளிரூட்டி அனுப்புகிறது. காற்றில் உள்ள மாசுக்களைத் தடுத்து தூயக்காற்றை உள்ளே அனுப்பும் வடிகட்டியாக செயல்படுகிறது.

நமது மூளை சக்தி வாய்ந்த கம்ப்யூட்டரை விட, மிகவும் சக்தி வாய்ந்தது. மூளை 100 பில்லியன் நரம்பு செல்களால் உருவானதாகும். நமக்கு மகிழ்ச்சி அளிக்கும் செயல்களை பார்க்கும் போது, நமது விழித்திரையானது சாதாரண நிலையை விட 45 சதவீத அளவில் விரிந்து விடுகிறது.

டைட்டானிக் கப்பல் தயாரிக்க வெறும் 7 மில்லியன் டாலர் மட்டும்தான், ஆனால் படம் எடுக்க 200 மில்லியன் டாலர் செலவானது.மனித உடலில் இரத்த ஓட்டம் இல்லாத ஒரே ஒரு பகுதி கண்ணின் கருவிழி மட்டுமே. உலக அளவில் மனிதனின் இறப்பிற்கு அதிகளவில் காரணமாக இருப்பது கொசுக்கள்தான்.

# உலகிலேயே மகிழ்ச்சிகரமான நாடு சுவிட்சர்லாந்து

உலகிலேயே மகிழ்ச்சிகரமான நாடு சுவிட்சர்லாந்து என 158 நாடுகளின் தர வரிசை பட்டியலில் தெரியவந்துள்ளது. பாகிஸ்தான், வங்காளதேசத்தை விட இந்தியா பின் தங்கி 117-வது இடத்தைப் பிடித்துள்ளது.

தனிநபர் வருமானம், மனிதர்களின் ஆரோக்கியமான ஆயுட்காலம், சமூக ஆதரவு, ஊழல் மற்றும் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை தேர்வு செய்வதில் சுதந்திரம் ஆகியவை மகிழ்ச்சிக்கான அடிப்படை அம்சங்களாகக் கருதப்படுகின்றன.

இந்த அம்சங்களையும், கால்லப் வேர்ல்ட் போல் என்ற சர்வேயையும் அடிப்படையாகக் கொண்டு, உலக அளவில் 158 நாடுகளின் நிலையை கவனத்தில் கொண்டு, மகிழ்ச்சிகரமான நாடுகளை ஐ.நா.சபையின் கீழ் இயங்குகிற சஸ்டைனபிள் டெவலப்மெண்ட் சொல்யூஷன்ஸ் நெட்வொர்க் வரிசைப்படுத்தி உள்ளது.

இந்தப் பட்டியலில் முதல் இடத்தை பிடித்திருப்பது சுவிட்சர்லாந்து ஆகும். 2-வது இடத்தை ஐஸ்லாந்து, 3-வது இடத்தை டென்மார்க், 4-வது இடத்தை நார்வே, 5-வது இடத்தை கனடா பிடித்துள்ளன. இந்த பட்டியலில் பாகிஸ்தான், வங்காளதேசம், பாலஸ்தீனம், ஈராக் உக்ரைன் உள்ளிட்ட நாடுகளைவிட இந்தியா பின்தங்கி இருப்பது அதிர்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது.

இந்தப் பட்டியலில் இந்தியாவுக்கு கிடைத்துள்ள இடம் 117 ஆகும். பாகிஸ்தான் 81-வது இடத்தில் உள்ளது. வங்காள தேசம் 109-வது இடத்தைப் பிடித்துள்ளது. உக்ரைனுக்கு 111-வது இடமும், பாலஸ்தீனத்துக்கு 108-வது இடமும், ஈராக்கிற்கு 112-வது இடமும் கிடைத்துள்ளது. அதாவது இந்திய மக்களை விட தீவிரவாதத்தாலும், அரசியல் குழப்பத்தாலும், உள்நாட்டு போராலும் இன்னும் பல வகையிலும் ஸ்திரமற்ற நிலையில் உள்ள பாகிஸ்தான், வங்காளதேசம், உக்ரைன், பாலஸ்தீனம், ஈராக் மக்கள் மகிழ்ச்சிகரமாக வாழ்வதாக இந்த பட்டியல் காட்டுகிறது.

வளர்ந்த நாடுகளான அமெரிக்காவுக்கு 15-வது இடம், இங்கிலாந்துக்கு 21-வது இடம், சிங்கப்பூருக்கு 24-வது இடம், சவுதி அரேபியாவுக்கு 35-வது இடம், ஜப்பானுக்கு 46-வது இடம், சீனாவுக்கு 84-வது இடம் கிடைத்துள்ளது.

உலகிலேயே மகிழ்ச்சி குறைந்த 5 நாடுகள் பட்டியவில் டோகோ, புரூண்டி, சிரியா, பெனின், ருவாண்டா இடம் பெற்றிருக்கின்றன.

**வேல்வளையாபதி.**

அணு மின்னாற்றல் உற்பத்தி நிலையங்கள் குறித்த “விபத்துக்கான பொறுப்பு இழப்பீடு கருவிகள் வழங்கும் நிறுவனங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்ற இந்திய அரசின் சட்டத்தை பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்கவில்லை. எனவே திரு. ஒபாமாவின் ஆணைக்கு அடிபணிந்து திரு.மோடி இழப்பீட்டுப் பொறுப்பினை, இந்திய அணு மின்னாற்றல் நிறுவனமும், சில பொதுக்காப் பீட்டு நிறுவனங்களும் இணைந்து ஏற்க வழி செய்துள்ளார் என்பது இந்திய இறையாண்மைக்கு உகந்ததா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இந்தியாவில் அணு உலை நிறுவ மேற்கத்திய நாடுகள் அக்கறைகாட்டுவதில் இரு நோக்கங்கள் உள்ளன. வாகனத்தின் மூலம் தனது நாட்டு பொருளாதாரத்தையும். வேலை வாய்ப்பையும் மேம்படுத்துவது. இரண்டாவது, தனது நாட்டுக்குத் தேவையான ஆற்றல் உறை பொருள்களை உற்பத்தி செய்வதைத் தவிர்த்து, இறக்குமதி செய்துகொள் வதன் மூலம் தனது நாட்டு சுற்றுச்சூழல் மாசு படுவதை அறவே தடுப்பது. இது ஒரு விதமான தொழில்நுட்பப் படையெடுப்பு என்பதை திரு.மோடியின் அரசு உணர்ந்ததாகத் தெரிய வில்லை. எனவே வளர்ச்சி என்ற செயல்பாட்டுக்கு அடிப்படையான மின்/எரி ஆற்றல் உற்பத்தியில் தெளிவான திட்டமில்லாமல், மின் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்தாமல், நுகர்வுத் தேவையை குறைக்க முயலாமல், சொற்களை அள்ளித் தெளிக் கும் ஆவணமாக திரு.அருண்ஜெட்யின் பட்ஜெட் உள்ளது.

தனது நாட்டு உற்பத்தி மதிப்பில் இராணுத்திற் கானச் செலவாக 1.5%க்கு குறைவாகவே ஜப்பான், ஜெர்மணி, பிரேசில் போன்ற நாடுகளும், 2.0%



அளவுக்குச் சீனாவும் செலவிடும் நிலையில், மக்கள் தொகையில் 40% மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உழலும் நிலையிலுள்ள இந்திய அரசின் பிரதமர் திரு.மோடி 2.5% (ரூ.2.46 லட்சம் கோடி) ஒதுக்கியுள்ளார். இது 120 கோடி இந்திய மக்களுக் கான மானியத் தொகையைவிட (ரூ.2.44 லட்சம் கோடி) அதிகம் என்பது ஆய்வுக்குரியது.

தற்போது நமது அண்டை நாடுகளான பாகிஸ் தான் 120, சீனா 250, அணு ஆயுதங்கள் வைத்துள் ளன. நம்மிடம் இருப்பது 110 மட்டுமே, என நியூக்கிளியர் நோட்புக் என்ற இதழ் கூறுகிறது. இந்நிலையில் இராணுவத்திற்கான செலவை அதிகரித்துக்கொண்டே போவதைத் தவிர்த்து, அவர்களுடன் சமூக உறவை வலுப்படுத்தினால், நமது வளங்களை ஏழை எளிய மக்களின் நலன் களுக்கான திட்டங்களில் செலவிட இயலும் என் பதை திரு.மோடியின் அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

நலவாழ்வுத்துறையில் உலக நாடுகளை ஒப்பிடும்போது இந்தியாவில் நிதி ஒதுக்கீடு குறித்த சில விவரங்கள் (உற்பத்தி மதிப்பின் விழுக்காடாக)

1. இந்தியா 1.3% 2) நேபாளம் 2.2% 3) சீனா 3%4) 4. ரஷ்யா 3.8%

இத்தரவுகள் நாட்டு மக்களின் நலவாழ்வில் திரு.மோடி அரசு அக்கறையற்றுள்ளது என்பதையே காட்டுகிறது.

மேலும் கல்வித் துறைக்கும் நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிட குறைவாகவே உள்ளது. சாலைகள், வானூர்தி நிலையங்கள், துறைமுகங்கள் மக்களை இணைக்கின்றன. நூலகம் வரலாற்றினை வெளிப் படுத்தவும், பல தலைமுறை மக்களை இணைக்கவும் பயன்படுகிறது. 14032015 யாழ்ப்பாணத்தில் திரு மோடியின் பேச்சு சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பற்ற நிலையை வெளிப்படுத்துகிறது.

வருமான வரி, சுங்க வரி, உற்பத்தி வரி இம் மூன்றின் வழி பெரு முதலாளிகளுக்கு, வரிச்சலுகை ஊக்கத்தொகை என கடந்த 10 ஆண்டுகளில் 43 லட்சம் கோடி ரூபாய் சலுகை அளிக்கப்பட் டுள்ளது. கடந்த இரு ஆண்டுகளில் மட்டும் ரூ.11.4 லட்சம் கோடி சலுகை வழங்கப்பட்டுள்ளது. காங்கிரஸின் திரு.மன்மோகன் சிங்கும், பா.ஜ.கவின் திரு.மோடியும் போட்டி போட்டுக்கொண்டு இப்பெரு முதலாளிகளுக்கு வரிச்சலுகை அளிப் பதும், அவர்கள் இவர்களுக்கு கட்சி நிதியாக பல்லாயிரம் கோடி நன்கொடை கொடுப்பதும் தெரிந்த ஒன்று தான். இதிலும் வெள்ளையாக குறைந்த அளவிலும், கருப்பு பணமாக பெரிய அள விலும் பரிமாற்றம் நிகழ்கிறது.

உலக மயமாக்கல் நிகழ்வுக்குப்பிறகு, பன்னாட்டு கம்பெனிகளின் வருகையால், கருப்பு பணத்தின் அளவு மிக அதிக மாகி, சனநாயகம் தேர்தல் முறை கேலிக் கூத்தாகியுள்ளது. இன்று முன்னாள் பிரதமர் திரு.மன் மோகன்சிங், நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழல் விசாரிக்க நீதிமன்றத்தால் அழைக்கப்பட் டிருக்கிறார். இந்த நிலை எதிர் காலத்தில் வேறு கட்சி ஆட்சிக்கு வரும்பொழுது, திரு.மோடிக்கும் நிகழும், இந்நிலையில் கருப்புப் பணம் குறித்த திரு.மோடி யின் கருத்து உண்மைக்குச் சிறிதும் தொடர்பற்று இருக்கிறது. தற்போதைய சட்டத்தின் வழியே கருப்புப் பணத்தை வெளிக்கொணரமுடியும் என்ற நிலையில், புதிதாக கடுமையான சட்டத்தைக் கொண்டுவருவதாக பட்ஜெட்டில் அறிவித்து திரு.மோடி."மஸ்தான் மோடி" வேலையையே செய்தி ருக்கிறார்.

இந்தியாவின் பட்ஜெட் 2015 பற்றாக்குறை ரூ.5.55.549 கோடி பெரு நிறுவனங்களுக்கான வரிச் சலுகை ரூ.5.89.285 கோடி அதாவது இவ்வரிச்சலு கையைத் தவிர்த்தால் இந்த பட்ஜெட் ரூ.33.636 கோடி உபரியாக இருந்திருக்கும். இப்பெரும் பணம் தற்போது குறைக்கப்பட்டிருக்கும் எளிய மக்களுக் கான பல்வேறு திட்டங்களுக்குத் திறம்பட நடத்த பயன்பட்டிருக்கும். இவ்வளவு சலுகைகள் பெறும், குறிப்பாக இந்திய நிறுவனங்கள் தாங்கள் ஈட்டும் வருவாயில் கணிசமான அளவை வெளிநாடுகளில் முதலீடு செய்கிறார்கள்.

கடந்த காலத்தில் இது நடப்புக் கணக்குப் பற்றாக்குறைக்கு வழிகோலி, நமது இந்திய ரூபாய் அமெரிக்க டாலருக்கு நிகராக, ரூ.68 ஆக வீழ்ச்சி யடைந்து. இந்திய அரசுக்கு பெரும் சிக்கலை ஏற் படுத்தியது. வெளிநாட்டு நிறுவனங்களை இங்கு

முதலீடு செய்ய கூவிக் கூவி அழைக்கும் திரு.மோடி யின் அரசு, இந்தியப் பெரு முதலாளிகளின் நன்றி கெட்ட செயலைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை என்பது அறியாமையா? கூட்டுக் களவாணித்தனமா?

உலக மயமாக்கலை ஏற்றுச் செயல்பட்டு வரும் (25 ஆண்டுகளாக) காங்கிரஸ், பா.ஜ.க.அரசுகள், உலக அளவில் இந்தியாவை அதிக பணக்காரர்கள் வாழும் நாடாக நான்காவது இடத்தை அடையச் செய்திருக்கிறது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளைப் புறந்தள்ளி, ஒரு சிலரிடம் செல்வம் குவிவதை ஊக்கப்படுத்தி இருக்கிறார்கள். குறிப்பாக, 2014ஆம் ஆண்டில் இந்தியாவில் 56 பணக்காரர்களின் சொத்துமதிப்பு ரூ.11,87,300 கோடி இது 2015ல் 90 நபர்களாக உயர்ந்து சொத்து மதிப்பு ரூ.18,22,800 கோடியானது. இப்படிச் சிலரிடம் குவியும் செல்வம், அவர்கள் ஆட்சிக் கட்டில் அமருபவர்களை, அதிகாரிகளை, ஏன் நீதிபதிகளை விலைக்கு வாங்கி தாங்கள் மென்மேலும் லாபம் பெறும் வகையில் சட்டத்தை உருவாக்கவும், வளைக்கவும் வழிகோலும், இந்தக் கருப்புப் பணம் தேர்தலின்போது ஏழை எளிய மக்களிடம் இருந்து வாக்குகளைப் பெறவும் பயன்படுகிறது. இச்சூழல் பொதுவுடைமை கருத்தோட்டம் உடைய, இடது சாரி சிந்தனைக் கட்சிகளால் மட்டுமே கருப்புப் பணத்தை ஒழிக்கவும், இயற்கை வளங் களை மக்களுக்கானப் பயன்பாட்டுக்கு வழிகோல வும் முடியும்.

இந்த பட்ஜெட் வளங்களை மக்களுக்கானப் பயன்பாட்டுக்கு வழிகோலவும் முடியும். இந்த பட்ஜெட் மக்களிடைய பொருளாதார ஏற்றத் தாழ்வை அதிகரிப்பதுடன், வரும் காலங்களிலும் அது தொடர்ந்து அதிகரிக்க வழிகோலுகிறது. இந்தியாவின் மக்கள் தொகையில், வேளாண்மை சார்ந்தவர்கள் 65% உருவாக்கும் உற்பத்தி மதிப்பு 18% மட்டுமே. இந்த நிலையை மேம்படுத்த திரு.அருண்ஜெட்லியும், திரு.நரேந்திர மோடியும் முயலவே இல்லை. எனவே இது பணக்காரர் களுக்கான பட்ஜெட்டே தவிர, ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கான நிதி நிலை அறிக்கை அல்ல.

## தெரிந்துகொள்க!

தமிழக அரசு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் ரேஷன் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப் படுகின்றன.

இவை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம் வினியோகம் செய்யப்படுகிறது. ரேஷன் கடைகளில் நடக்கும் முறைகேடுகளைத் தடுக்கவும், உணவுப் பொருட்கள் பதுக்கலைக் கண்காணிக்கவும் பறக்கும் படை அமைக்கப் பட்டும், முறைகேடுகள் தொடர்ந்து கொண்டே இருக் கின்றன. எனவே, பொதுமக்கள் தங்கள் பகுதி ரேஷன் கடைகளில் முறை கேடுகள் நடைபெற்றால் பறக்கும் படையினருக்கு செல் போனில் தகவல் தெரிவிக் கலாம்.

மாவட்டம் வாரியாக பறக்கும் படை தாசில்தார்களின் கைபேசி எண்கள் வருமாறு:

காஞ்சிபுரம் 9445045604
திருவள்ளூர் 9445045605 திருச்சி 9445045618
வேலூர் 9445045606 தஞ்சாவூர் 9445045619
தி.மலை 9445045607 திருவாரூர் 9445045620
விழுப்புரம் 9445045608 நாகை 9445045621
கடலூர் 9445045609 புதுகை 9445045622
தர்மபுரி 9445045610 திண்டுக்கல் 9445045623
சேலம் 9445045611 தேனி 9445045624
நாமக்கல் 9445045612 மதுரை 9445045625
ஈரோடு 9445045613 சிவகங்கை 9445045626
கோவை 9445045614 விருதுநகர் 9445045627
நீலகிரி 9445045615 ராமநாதபுரம் 9445045628
கரூர் 9445045616 தூத்துக்குடி 9445045629
பெரம்பலூர் 9445045617 நெல்லை 9445045630
கன்னியாகுமரி -9445045631
கிருஷ்ணகிரி -9445045632

# சிறுகதை

இருங்கோவேள்

# என்னப் பெத்த தாயி!

குணவழகனுக்கு வயது இரண்டு இருக்கும் போதே அவனது தந்தையார் நல்லபாம்பு கொத்தி இறந்து போனார். வயலிலேயே நுரை தள்ளிக்கிடந்த அவரை தூக்கி வந்து அவன் கொள்ளி வைத்தது அவனுக்கு நினைவு இல்லை. அவனது அம்மாவும் உறவினர்களும் சொல்லித்தான் அவன் புரிந்து கொண்டான் பின் நாட்களில்.

குணவழகனுக்கு உறவினர்கள் இருந்தார்கள் என்றாலும் அவனுக்கு உலகமே அவனது தாய் தான். நன்றாகப் படித்தான் என்றாலும் அம்மாவையே சுற்றிச்சுற்றி வந்தான். அவனது வாலிப காலத்தில் ஏதாவது இளம் பெண்கள் அவனைப் பார்த்தால் அவர்களது பார்வையைத் தவிர்த்து வேறு வழி செல்வான். அவன்படித்த கல்லூரி அவனது ஊரிலிருந்து தூரத்தில் இருந்தது. ஆனால் தினமும் அதிகாலையில் சென்று மாலை 7 மணிக்கு வீடு திரும்புவான் கல்லூரியில் விடுதி இருக்கிறதே அங்கேயே தங்கிப்படிக்கக்கூடாதா? ஏன் இவ்வளவு அலைச்சல் என்று உறவினர்கள் கேட்கும் போது சிரித்து சமாளித்துவிடுவான். அவனுக்கும் அவனது தாய்க்கும் ஒருவரை விட்டு ஒருவர் ஒருநாள் கூட பிரிந்திருக்க முடியாது. அதனால் தான் தங்கிப் படிக்காமல் தினமும் போய் வந்து கொண்டிருந் தான்.



கல்லூரியில் இருபாலரும் படித்தனர். பல பெண்கள் குணவழகனைச் சுற்றிச்சுற்றி வந்தும் எந்த எதிர் வினையும் இல்லாததால் அவர்களே அவனை விட்டுத் தள்ளிப் போவார்கள். பட்டப்படிப்பை முடித்த குணவழகனை உயர்ந்த வேலையில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று நினைத்த அவனது தாய் அரசு வேலைக்கு விண்ணப்பிக்கச் சொன்னார். குணவழகனுக்கு எவ்வித கையூட்டும் இன்றி வேலை கிடைத்தது. வேலையோ அருகிலுள்ள நகரத்தில் கிடைத்தது. மகனை விட்டுப்பிரிய முடியாத குணவழகனின் தாய் தனது நிலங்களை எல்லாம் குத்தகைக்கு விட்டு விட்டு நகரத்திற்கு வந்து விட்டார்.

நகரத்திற்கு வந்த ஏழு மாதங்களில் மூன்று நான்கு முறை உடல்நிலை சரியில்லாமல் குணவழகனின் தாய் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியதாகிப் போய் விட்டது. உண்மையில் குணவழகன் தாய்க்கு நகரம் பிடிக்கவில்லை. வயல் வேலைகளை எல்லாம் செய்து இயற்கையோடு வாழ்ந்த அவரால் நகரத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. தனது மகனுக்காகவே நகரத்தில் இருந்தார்.

குணவழகனுக்கு அரசு வேலை பிடிக்கவில்லை. கட்டுப்பாடு அற்ற சுத்தமான ஊர்க் காற்றுக்காக அவனது உள்ளம் ஏங்கியது. தனது தாயின் ஆசைக்காகத்தான் நகரத்தில் விருப்பம் இன்றி வேலை செய்து வந்தான்.

தாயின் உடல் நிலையில் அடிக்கடி நலக்குறைவு ஏற்பட்டதால் அம்மாவைக் கேட்காமலே விலகல் கடிதத்தை உயரதிகாரிக்கு அனுப்பிவிட்டு சொந்த ஊருக்கே வந்து விட்டான். ஊருக்கு வந்ததும் அம்மாவின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது ஓரிரு ஆண்டுகள் ஓடி இருக்கும் மறுபடியும் தாய்க்கு உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது.

மருத்துவமனைக்குச் சென்று சோதித்ததில் குணப்படுத்த இயலாத நோய் வந்திருப்பதாக மருத்துவர்கள் கூறினார்கள். குணவழகனிடம்தான் மருத்துவர்கள் இதைச் சொன்னார்கள் என்றாலும், அவனது தாய் மருத்துவப் பணிப்பெண் மூலமாக தன் நிலையைத் தெரிந்து கொண்டார். சில மருததுவச் சிகிச்சைகளை முடித்துக்கொண்டு மாத்திரை மருந்துகளுடன் ஊர் திரும்பினார்கள். வீட்டுக்கு வந்த இருநாட்களில் மகனிடம் “உடனே திருமணம் செய்து கொள்“ என்று தாய் வற்புறுத்துத் தொடங்கினார். இதுவரை அம்மாவின் விருப்ப மான தனது திருமணத்தைத் தட்டிக் கழித்து வந்த குணவழகன். எதுவும் பதில் சொல்லாமல் இருந்தான். அவனது தாயாரோ அடுத்தடுத்த நாட்களில் தன்னைப் பார்க்க வருகிற உறவினர்களிடம் தனது மகனுக்கு பெண் பார்த்துத் தருமாறு வேண்டிக் கொண்டாள்.

குணவழகனின் தூரத்து உறவினர் ஒருவர் குணவழகனின் தாயார் உடல் நிலையைப் பார்த்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டார். அவரது மகளான ஒளியழகி நானும் வருகிறேன் அப்பா என்றாள். பட்டப்படிப்பு முடித்து விட்டு வீட்டிலேயே இருக்கும் மகளுக்கு ஒரு சூழல் மாற்றம் இருக்கட்டுமே என்று சரிம்மா என்று ஒளியழகியையும் அழைத்துக் கொண்டு குணவழகன் வீட்டிற்கு வந்து அவனது அம்மாவின் உடல் நலம் பற்றி விசாரித்தார் ஒளியழகியின் தந்தை.

குணவழகனின் தாய், அந்த தூரத்து உறவினரை அடையாளம் தெரிந்து கொண்டு வா தம்பி இப்பதான் இந்த அக்கா நெனப்பு வந்துச்சா ஆமா இது யாரு உம் மகளா? என்னம்மா பண்றே என்று ஒளியழகியிடம் கேட்க, “நான் எம் காம் படிச்சுட்டு இப்ப வீட்டில் தான் இருக்கேன்“ என்றாள்.

குணவழகனின் தாயோ ஒளியழகிக்கு திருமணம் ஆகிவிட்டதா, என்ற கேள்வியைக்கேட்காமலேயே “தம்பி, என் பையனுக்கு உன் பொண்ணை தாப்பா, நான் இருக்கிறதுக்குள்ள எம் பையனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி பாத்துடணும் தம்பி, உன் பொண்ணைத் தருவியா“ என்று சிறிது கெஞ்சல் மொழியில் கேட்க, “எனக்கு சம்மதம் தான் அக்கா, ஆனா வாழப் போறவங்க இரண்டு பேருக்கும் பிடிக்கணுமே“ என்றார் ஒளியழகியின் தந்தை.

மகனை வரச்சொல்றேன் இரண்டு பேரும் பாக்கட்டும் என்று சொல்லிவிட்டு பக்கத்து வீட்டு சம்பூரணத்தை அழைத்து “அம்மா சம்பூரணம் நம்ம பெரிய கொல்லையில் குணா நிப்பான் கொஞ்சம்

வெரசா வரச்சொல்லும்மா“ என்று சொல்லவும் சரிங்கத்தை என்று கூறிச்சென்றார் அந்தப் பெண்மணி.

இதற்கிடையில் குணவழகனின் தாய் ஒளியழகி யின் தந்தையிடம் “என் மகனை நீங்க பாத்திருக்கீங் களா“ என்று கேட்க, அவரோ, “இல்லக்கா சின்னப் பையனா பாத்தது, அதுக்கப்புறம் பாக்கல“ என்றான்.

“வாசல் நிலைக்கு மேல அவன் போட்டோ இருக்கு பாருங்க என்றார்“ குணவழகனின் தாய். அவர் எழுந்திருக்கும்போதே சிறிது வெட்கத் துடனும் ஒருவித தயக்கத்துடனும் தந்தையைப் பின் தொடர்ந்தாள் ஒளியழகி. இருவரும் புகைப்படத் தைப் பார்த்தனர். அவன் பட்டமளிப்பு விழாவில் எடுத்துக்கொண்ட புகைப்படம் அது.

ஒளியழகி அந்தப் புகைப்படத்தைப் பார்த்த வுடன் தன்னையுமறியாமல் இவர் நமக்கு சொந்த மாப்பா? என்று கேட்க என்னம்மா வெளயாட்டுப் பிள்ளையா இருக்கே நமக்குச் சொந்தந்தாம்மா, அதனாலதானே இங்க வந்திருக்கோம், இவங்க எனக்கு அக்கா முறைம்மா“ என்றார். “அப்பா இவரு பேரு குணவழகனா“ என்று அடுத்த கேள்வியை வீசினாள். “எனக்குத் தெரியலேயம்மா இரு அக்காக்கிட்ட கேட்கலாம்“ என்று மகளையும் அழைத்துக்கொண்டு குணவழகனின் தாய் படுத் திருந்த அறைக்கு வந்து, “அக்கா மருமகன் பேரு குணவழகனா?“ என்று கேட்க ஆமா தம்பி என்று அந்தத் தாய் கூறவும் ஒளியழகியின் முகம் அன்று மலர்ந்த செந்தாமரையாகிப்போனது.

உடனே, அப்பாவின் காதுக்கருகில் “எனக்கு சம்மதம்ப்பா“ என்றாள். என்னம்மா அவரப் பாக்கவே இல்லை சம்மதம்னு சொல்றே என்று கேட்க, “நான் படிச்ச கல்லூரியில் தாம்ப்பா அவரும் படிச்சாரு. நான் சேந்த அடுத்த ஆண்டே அவரு முதுகலைப் படிப்பை முடிச்சுட்டுப் போயிட்டாரு. அந்த ஒரு ஆண்டுல அவரப்பத்திக் கேள்விப்பட் டிருக்கேன். அவரப் பாத்தும் இருக்கோன். அவரக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி பல பேரு அவருட்ட கேட்டும் அவரு நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லைன்னு சொல்லிட்டா ராம்ப்பா.அவரு இப்ப மனசு மாறியிருக்கிறாரு போல, அது எனக்காகத்தான்னு நெனக்கிறேம்ப்பா“ என்றாள்.

மருமக என்ன சொல்லுது என்று கேட்ட குணவழகனின் தாயிடம் திருமணத்துக்கு சம்மதம்னு சொல்லுது என்றார் ஒளியழகியின் தந்தை. இதைக் கேட்டதும் படுத்திருந்த குணவழகனின் தாய் எழுந்து உட்கார்ந்து, “அம்மா! இங்க வா! என் ராசாத்தி!“ என்று ஒளியழகியை அழைத்து, அவளது உச்சியில் முத்தமழை பொழிந்தார். ஒளியழகி இதுவரை இல்லாத ஒரு மகிழ்வு நிலையில் மிதந்தாள். தனக்கும் குணவழகனுக்கும் திருமணம் முடிந்துவிட்டதாகவே எண்ணினாள்.

இவர்கள் இப்படியொரு மகிழ்வான நிலையில் இருக்கும்போது உள்ளே நுழைந்தான் குணவழகன். விட்டிற்கு வந்திருப்பவர்கள் யார் என்றே தெரியாமல் வாங்க, சுகமா இருக்கீங்களா? என்று விசாரித்துவிட்டு தனது தாயின் அருகில் இருந்த ஒளியழகியை சாதாரணமாகப் பார்த்துவிட்டு, அம்மா எழுந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியோடு என்னம்மா வரச்சொன்னீங்க. என்று கேட்டான். தாயோ, பல உறவுகளைக்கூறி அந்த வகையில் இவர் உனக்கு மாமா, இவ மாமா மகள் என்றார். மறுபடியும் இருவருக்கும் வணக்கம் சொன்னான்.

மகனை தன் அருகில் அழைத்து அவன் காதோரத்தில் “இவதான்டா என் மருமகள் நல்லாப் பாத்துக்கோ“ என்றார். என்னம்மா சொல்றீங்க திடுதிப்னு இப்படி முடிவெடுத்திட்டீங்க என்று மகன் கேட்க, உனக்குப் பிடிக்கலன்னா சொல்லு, நான் செத்துப்புறம் உனக்கு பிடிச்சவளக் கட்டிக்கோ“ என்றார்.

“என்னம்மா சொல்லுறீங்க நீங்க எழுந்து உட்கார்ந்திருக்கீங்க அதுக்கு இந்தப் பொண்ணு தான் காரணமா இருக்கும்னு புரிஞ்சுக்கிட்டேன் அம்மா. உங்க விருப்பப்படி செய்ங்கம்மா“ என்றான்.

“அத்தாச்சி மாமாவுக்கு கொஞ்சம் மோர் கொண்டு வாங்க என்று சம்பூரணத்திடம் கூறி விட்டு ஒளியழகியைப் பார்த்தான். எனக்கில் லையா? என்று அவளது விழிகள் அவனைப் பார்த்துக் கேட்டன.

சம்பூரணம் அத்தாச்சி மோர் கொண்டுவந்தாள். மாமாவிற்கு வாங்கிக் கொடுத்தான். இன்னொரு

குவளையில் ஊற்றச் சொல்லி அதை ஒளியழகி யிடம் கொடுத்தான் குணவழகன்.

ஒளியழகி படித்தவள், பல காதல் கதைகளைக் கேட்டவள், பலருடைய காதல் நடவடிக்கைகளைப் பார்த்தவள் என்றாலும் அவளது கைகள் மோர்க்கு வளையை பற்றிப் பிடிக்கச் செயலிழந்து தவித்து பின், பற்றின. இதுதான் காதலோ என்று முதன் முதலாக உணர்ந்தாள். குணவழகன் தன்னைத் திரு மணம் செய்ய மறுத்தாலும் இப்போதுள்ள இந்த நினைவு தனக்கு நிறைவாகவே இருக்கும் என்று எண்ணினாள்.

“சம்பூரணம் எம்மருமக நல்லாயிருக்காளான்னு பாரும்மா என்றார் குணவழகனின் தாய். “என்ன அத்தை எங்களுக்கெல்லாம் சொல்லாம மருமகளை தேடிப்பிடிச்சு கொண்டு வந்துட்டீங்களா?“ என்று கூறிக்கொண்டே குணாவுக்கு ஏத்த பொண்ணு அத்தே எனக்குப் புடிச்சிருக்கு கொழுந்தனாரு என்ன சொல்றாரு“ என்று கேட்டாள். அவர் நீயே கேளு என்றவுடன் “என்ன கொழுந்து இந்தத் தங் கச்சிய விட்டா யாரும் உங்கள கட்டிக்க மாட்டாங்க, இதுக்கு மேல அழகான பொண்ணு கெடைக்காது, நான் வேணுன்னா கடைக்குப் போயி ஒரு மஞ்சக்கயிறு வாங்கிட்டு வரேன். இப்பவே தாலி கட்டிருங்க“ என்றாள். அனைவரும் சிரித்தனர்.

அந்தச் சூழல் ஒளியழகிக்கு மிகவும் பிடித்துப் போனது. அவளும் அவளது அப்பாவும் எல்லோரிடமும் சொல்லிவிட்டு, குணவழகனின் ஒரு புகைப்படத்தை வாங்கிக் கொண்டு சென்றார்கள்.

ஒளியழகியின் தந்தையார் தன் மனைவியிடம் “இந்தப் பையன் எப்படி இருக்கிறார் நம்ம மகளை கேக்குறாங்க“ என்றார். அவரோ “பையன் நல்லாதாங்க இருக்காரு மகளுக்குப் பிடிக்குதான்னு கேட்டுட்டு ஆக வேண்டியதப் பாக்கலாங்க“ என்றார். ஒளியழகி சிரித்தாள். “என்னடி சிரிக்கிற“ என்று கேட்ட அவருக்கு ஒளியழகியின் தந்தையார் நடந்த அனைத்தையும் என்று விடாமல் சொல்லி முடித்தார். “உங்க சொந்தம்னதும் அப்பனும் மகளும் கல்யாணப் பேச்சு பேசி முடிச்சிட்டு வந்து எங்கிட்ட ஒப்புக்குச் சொல்றீங்களா“ என்று பொய்க் கோபம் காட்டினார்.

“நீங்க தாம்மா முடிவு எடுக்கணும். அதுதாம்மா போட்டோவ கையோடு வாங்கிட்டு வந்தோம்“ என்று ஒளியழகி அம்மாவிடம் கொஞ்சினாள். இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த ஒளியழகியின் தம்பி மதுரை வீரன் அம்மாவிடம் இருந்த புகைப்படத்தை பிடுங்கிக்கொண்டு வாசலுக்கு வந்து பார்த்தான். “அக்கா மாப்பிள்ளை நல்லாதான் இருக்காரு“ என்று சப்தமாகச் சொன்னான் மதுரைவீரன். அவன் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தான்.

“இந்தா, உன் தம்பியே அக்கா மாப்பிள்ளைன்னு சொல்லிட்டான். நான் மட்டும் மருமகன்னு சொல்லாம இருக்க முடியுமா? அவங்கள ஒரு நாள் வரச் சொல்லுங்க திருமணத் தேதிய நிச்சயம் பண்ணிடலாம்“ என்றார். அந்த வீட்டிற்கே திருமண களை வந்து விட்டது.

குணவழகனின் தாய் அவசரப்படுத்தியதால் வெகு விரைவாக திருமணம் நடந்தேறியது குணவழகனின் தாய் திருமணத்திற்குப் பிறகு கொஞ்சம் தெம்பாக இருந்தார். போகப் போக சுகவீனமாக படுக்கையில் வீழ்ந்தார். ஒளியழகி படித்தவள் என்றாலும் தனது அத்தைக்கு அத்தனை பணிகளையும் முகங்கோணாமல் செய்தாள். தனது மகனுக்கு ஒரு நல்ல பெண்ணை திருமணம் செய்து வைத்து விட்டோம் என்ற மனநிறைவு, அந்தத் தாயின் முகத்தில் எப்போதும் தெரிந்தது, என்றாலும் ஒரு சிறு கவலையும் அந்த முகத்தில் அவ்வப்போது தலைகாட்டிய வண்ணமே இருந்தது. காரணம், திருமணம் முடிந்து மாதங்கள் கடந்தும் தன் மருமகள் ஒரு நல்ல செய்தி சொல்லவில்லையே என்பது தான் அது. அவருக்கெங்கே தெரியப் போகிறது குணவழகனின் எண்ணம். ஒளியழகியிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்ட அவன் அம்மா சுகமானதும் நாம் குழந்தை பெற்றுக்கொள்ளலாம், என்று சொல்லி வைத்திருந்தான். உண்மையில் அம்மா குணமாகப் போவதில்லை என்பது அவனுக்குத் தெரியும். அம்மா இப்படிப்பட்ட ஒரு நிலையில் இருக்கும்போது குழந்தை தேவையில்லை என்று முடிவு செய்திருந்தான் குணவழகன்.

குணவழகனின் தாய்க்குத் தெரிந்து விட்டது தனது நேரம் முடிந்து விட்டதென்று. மகனையும்

மருமகளையும் அழைத்து எனது நாட்கள் நீடிக்காது நான் சீக்கிரம் இறந்து விடுவேன். ஆனால் நான் உங்களை விட்டுப் போக மாட்டேன். உங்களுக்கு குழந்தையாகப் பிறப்பேன் என்று கூறியவர் அதன்பிறகு வாயே திறவாமல் சுய நினைவின்றி நான்காம் நாள் இறந்து போனார்.

குணவழகன் இடிந்து போனார் எங்கே தன் கணவன் பைத்தியமாக ஆகிவிடுவாரோ என்ற எண்ணம் ஒளியழகிக்கு வந்து விட்டது.

தனது அப்பாவை வரச் சொல்லி விபரத்தைக் கூறினாள். அவர் மருமகனிடம் நீங்களும் ஒளியழகியும் கொஞ்சநாள் நம்ம வீட்ல வந்து இருங்க என்று விடாப்பிடியாக அழைத்துச் சென்றார். குணவழகன் கொஞ்சம் கொஞ்சமாக தனது நிலைக்கு வந்தான்.

மனைவியும் அவள் வீட்டாரும் கேட்டுக் கொண்ட தற்கு இணங்க நகரத்திலேயே ஒரு நல்ல வேலையில் அமர்ந்தான். ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, தனிக்குடித்தனம் சென்றனர். ஒளியழகியும் வேலைக்குப் போகிறேன், தனியாக இருக்கப் பிடிக்கவில்லை என்றாள்.

அவளும் ஒரு தனியார் பள்ளியில் வேலைக்குச் சென்றாள். இருவரும் அடிக்கடி ஊருக்குச்சென்று வந்தனர். ஊருக்குச் சென்றால் வீட்டிற்குப் போகும் முன் தாய்க்கு கட்டியிருந்த நினைவுக் கட்டிடத்துக்குப் போய்விட்டுத்தான் வீட்டுக்குப் போவதை வழக்கமாகக் கொண்டான் குணவழகன். அம்மா இறந்து ஒரு ஆண்டு முடிந்து விட்டது என்று, அன்று வேலைக்குச் செல்லாமலும் காலையில் உணவு உண்ணாமலும் இருந்தான் குணவழகன், ஒளியழகியும் இவனது நிலையறிந்து பள்ளிக்குச் செல்லாமல் கணவனுடன் இருந்தாள்.

மதியம் சாப்பிட ஐந்து பேரை வரச்சொல்லி யிருக்கிறேன். அவர்களுக்கும் சேர்த்து சமைத்து வை என்று கூறிவிட்டு கடைக்குச் சென்று ஏழு சேலைகள் வாங்கி வந்து மனைவியிடம் கொடுத்து சாயங்காலமா வெளியூர் பேருந்து நிற்குமிடத்துக்குச் சென்று அங்கே உனக்கு ஏழ்மையாக யார் தெரிகிறார்களோ அவர்களுக்குக் கொடுத்து விட்டு வா என்றான். அவளும் அப்படியே செய்தாள். இரவு தூங்கப் போகும் வரை அவன் வேறெதுவும் பேசவில்லை அவளும் அவனைத் தொந்தரவு செய்ய வில்லை.

தாயின் இழப்பை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்திற்கு வந்திருந்தான். கொஞ்சம் கொஞ்சமாக மனைவியுடன் நெருக்கமாக ஆகிக்கொண்டிருந்தான். அன்று இரவு இருவரும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தனர் காலை இரண்டு மணியளவில் தான் தூங்கினார்கள். நான்கு மணிக்கெல்லாம் திடீரென்று "அம்மா! அம்மா!!" என்று அழைத்தான் ஒளியழகி எழுந்து அவனை உலுக்கி "என்னங்க, என்னாச்சு உங்களுக்கு" என்று கேட்டபோது தான், தன் நிலைக்கு வந்தான். "கனவுல அம்மா வந்தாங்க நான் உனக்கு மகளா பொறக்கப் போறேண்டா குணா" என்றார்கள் என்றான். ஒளியழகி பதற்றம் நீங்கி வெட்கப் பட்டுக்கொண்டு இழுத்துப்போர்த்திக் கொண்டு தூங்க முயற்சித் தாள். குணவழகனும் சேர்ந்து கொண்டான். பின்னர் தூக்கமின்றியே மகிழ்வோடு விடிந்தது அந்த நாள்.

அம்மாவின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளுக்கு இரு மாதங்களுக்கு முன்னதாக ஒளியழகிக்கு மாமியாரை உரித்து வைத்தது போல் பெண் குழந்தை பிறந்தது. இருவீட்டாரும் மகிழ்ந்தனர். குணவழகன் இறக்கை இன்றிப் பறந்தான். என்னைப் பெத்த தாயி என்று குழந்தையை தூக்கி முத்தமிட்டான்.

அன்றிலிருந்து இன்று வரை அவனுடைய மகளை "என்னப்பெத்த தாயி" என்றுதான் அழைப் பான். மகளும் வளர்ந்து, படித்து, பெரியவளாகி, திருமணமாகி, புகுந்த வீடும் சென்று விட்டாள். ஆனால் இன்றும் அவள்தான் குணவழகனுக்கு தாய். முதிர்வயது வந்து இறப்பை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் "என்னப் பெத்த தாயப் பார்க்கணும்" என்றான். மகளுக்கு செய்தி அனுப்பப் பட்டது. அவள் வந்ததும் "என்னப்பெத்த தாயி நலமா இருக்கியாம்மா" என்று கேட்டு அவளை அருகில் அமர வைத்து, தனது தலையை மகள் மடியில் வைத்து, மகளை அண்ணாந்து பார்த்தபடியே, மகள் மடியிலிருந்து தாய் மடிக்குப் புறப்பட்டுப் போனார் குணவழகன்.

◆



# லஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

## நடந்ததா! நடக்கிறதா!

அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் நேர்மைக்கு எதிரானவைகளைச் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்துகிறார்கள், அச்சுறுத்துகிறார்கள் என்று எழுதி வைத்துவிட்டு, அல்லது பிறரிடம் கூறிவிட்டு தற்கொலைக்கு முனைகிறார்கள். சிலர் தற்கொலையும் செய்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்வுகள் இப்போதுதான் நடைபெறுகின்றனவா? அல்லது இதற்கு முன்பும் நடைபெற்றதா? நடைபெற்ற இம்மாதிரியான நிகழ்வுகளை ஊடகங்கள் உலகுக்குச் சொல்லவில்லையா? அல்லது இறந்தவர்களின் உறவுகள் பயமுறுத்தப்பட்டு செய்திகள் வெளியில் வராமல் தடுக்கப்பட்டனவா என்றெல்லாம் ஐயங்கள் நமக்கு ஏற்படுகின்றன.

நெல்லை வேளாண் அதிகாரி முத்துக்குமாரசாமி, ஓட்டுநர்கள் நியமனத்தில் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக கடந்த பிப்ரவரி மாதம் 20ஆம் தேதி தொடர்வண்டி முன்பு பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். அவரது மனஉளைச்சலுக்கு யார் காரணம் என்று பார்த்தபோது தமிழக அமைச்சரே அதற்கு காரணமாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அவரும் கைது செய்யப்பட்டு காவலில் உள்ளார். இந்த துன்பகரமான நிகழ்வைத் தொடர்ந்து இது போன்ற பல தகவல்கள் ஊடகங்களில் வந்து கொண்டிருக்கின்றன. கடந்த மூன்றாம் தேதி முத்துக்குமார் என்ற அலுவலர் தீக்குளித்து இறந்தார். காரணம் மேலதிகாரிகளின் அச்சுறுத்தலே என்று கூறப்படுகிறது.

திருவாரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி கவிதா மருத்துவமனைக்குச் சென்று முத்துக்கிருஷ்ணனிடம் மரண வாக்குமூலம் பெற்றிருக்கிறார். முத்துக்கிருஷ்ணன் கடந்த ஆறு மாதங்களுக்கு முன் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் வரைவாளராக வேலை செய்திருக்கிறார். அங்கு செயற்பொறியாளராக வேலை செய்த செந்தில் குமார் என்பவர் தான் கூறும் நபர்களுக்கு கம்பி மற்றும் சிமெண்ட் கணக்கில் காட்டாமல் கொடுக்குமாறு முத்துக்கிருஷ்ணனை வற்புறுத்தியுள்ளார். அதன்படி முத்துக்கிருஷ்ணன் 1500 கிலோ கம்பி மற்றும் 500 மூட்டை சிமெண்ட் மூட்டைகள் கொடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதன்பிறகும் செந்தில்குமார் தவறு செய்ய வற்புறுத்தியதாகவும் அதன்காரணமாக அவர் தற்கொலைக்கு முயன்றதாக வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். பின்னர் சிகிச்சை பலனிக்காமல் இறந்தும் போய்விட்டார்.

ஒட்டன்சத்திரத்தைச் சேர்ந்த தமிழ்ச்செல்வி (வயது 38) என்பவர்தேவத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக இருந்து வருகிறார். தமிழ்ச் செல்விக்கு பணி தொடர்பாக குமரேசன், துணை தாசில்தார்கள் பழனிச்சாமி, பிரசன்னா ஆகியோர் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வந்ததாகக் கூறப் படுகிறது. ஐந்தாம்தேதி மதியம் அளவுக்கதிமாக தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற் கொலைக்கு முயன்றிருக்கிறார்.

அவரை சிகிச்சைக் காக மருத்துமனையில் அனுமதித்திருக்கிறார்கள். தமிழ்ச்செல்வியின் தந்தை, தனது மகளின் இந்த முடிவிற்கு உயர் அதிகாரிகளின் நெருக்கடியே காரணம் என்று கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட நிகழ்வுகள் தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றன. நேர்மையான அலுவலர்கள் எவ்வளவு நேர்மையாக இருந்தாலும் தவறான உயர்அதிகாரிகளால் தாங்கள் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படும்போது தவறு செய்வதைவிட உயிர்துறப்பது மேல் என்ற இறுதி நிலைக்குச் சென்றுவிடுவது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். இச்செயல்பாடுகள் அரசுத்துறைகள் எல்லாவற்றி லும் இருக்கிறது.

முக்கியமாக காவல்துறையில் இதுபோன்ற அவலங்கள் அதிகம் நடைபெறு கின்றன என்றும் பாதிக்கப்பட்டவர்கள் அதை வெளியில் சொல்லுவதே இல்லை என்றும் சொல்லப் படுகிறது. இவர்கள் எல்லாம் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாய் தங்களது இயலாமையை பொதுமக்களிடம் காட்டக்கூடியவர்களாய் மாறிப்போய்விடுகிறார்கள் என்று சொல்லப் படுகிறது.

உயர் அதிகாரிகள் மனிதத் தன்மையோடு நடந்து கொண்டாலன்றி இதுபோன்ற தற்கொலைகளை நிறுத்துவது இயலாத காரியமாகும். உடன் பணி யாளர்களை தங்களைப் போன்றே நினைத்து, அவர் களை பணிசெய்ய உதவுவதன் மூலமாக தற் கொலைகள் தடுக்கப்படுவதுடன் சிறப்பான பணிப் பயன்பாடுகள் அரசுக்கு கிடைக்கும் என்பதே உண்மை.

**வேர்மகள்**

## தெரிந்து கொள்க!



சில நேரங்களில் முக்கியமான நபர்களுக்கு நாம் போன் செய்ய வேண்டியிருக்கும் ஆனால் நமது போனில் பேலன்ஸ் இருக்காது. ஆள்பேர் இல்லாத இடத்தில் மாட்டிக்கொண்டிருப்போம் இண்டர்நெட் வசதியும் இருக்காது. போன் செய்ய முடியாமல் போய், நமக்கு அதனால் இழப்பு ஏற்படும். இல்லை எனில் யாரிடமாவது திட்டுவாங்குவோம்.

இனி அந்த நிலை ஏற்படாது. பெங்களூரைச் சேர்ந்த 3 மாணவர்கள் சேர்ந்து திஸிணிணிரிகிலிலி என்ற சேவை அறிமுகம் செய்துள்ளனர். இதன் மூலம் நமது போனிலிருந்தே இலவசமாக கால் செய்து கொள்ளலாம். இதற்கு இண்டர்நெட் தேவையில்லை சாதாரண black & white Nokia போன் போதும்.

ஐபோன் (iphone) முதல் சாதாரண சைனா போன் வரை அனைத்திலும் இது வேலை செய்யும். ஆச்சரிய மாக உள்ளதா ஆம் இது உண்மை தான்! இந்த சேவை யைப் பயன்படுத்தி எப்படி இலவசமாக போன் செய்வது என்பதை பார்ப்போம்.

முதலில் நாம் நமது போனில் இருந்து "1900 108 4444" என்ற நம்பருக்கு போன் செய்ய வேண்டும் (இந்திய எண்ணிலிருந்து) இதற்கு நமது போனில் பேலன்ஸ் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படியே பேலன்ஸ் இருந்தாலும் பணம் எடுக்கப்பட மாட்டாது. நாம் இந்த நம்பருக்கு கால் செய்ததும் கால் தானாக கட் ஆகிவிடும். கட் ஆன அடுத்த நொடியில் "8067915000" என்ற எண்ணில் இருந்து நமது போனிற்கு (mobile) கால் வரும். அதை நாம் எடுத்து, நாம் யாருக்கு போன் செய்ய வேண்டுமோ அவர்களது நம்பரை (phone number) dial செய்து அவர்களுடன் இலவசமாக பேசிக்கொள்ளலாம். வித்தியாசமான சேவையாக இருக்கின்றதல்லவா? ஆம் இந்த சேவை யை கடந்த மார்ச் மாதம் தான் பெங்களூர் மாணவர்கள் ஆரம்பித்துள்ளார்கள்.

**இமயவரம்பன்**

மோடி, சமீபத்தில் 3 நாடுகள் பயணத்தின் இறுதிக்கட்டமாக கனடா சென்றபோது, டொரண்டோ நகரில், கடந்த 16ஆம் தேதி கனடா வாழ் இந்தியர்கள் அவருக்கு வரவேற்பு அளித்தனர். அப்போது பேசிய அவர், “இதற்கு முன்பு இந்தியா “ஊழல் இந்தியா“ என்று அறியப்பட்டிருந்தது. ஆனால் நாங்கள் அதை திறன் வாய்ந்த இந்தியா வாக மாற்றிக்காட்ட விரும்புகிறோம். அதை செய்து காட்டுவோம்“ என சூளுரைத்தார் என்றாலும் தன் நாடு ஊழல் மிகுந்த நாடு என்று அயல்நாட்டில் பறையறிவித்த முறை சரியானதல்ல என்று மாற்றுக் கருத்துகள் வந்தன. நாடு திரும்பிய மோடி ஊழலை ஒழிக்க சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்திருக் கிறார்.

இந்தச் சட்டத்தின்கீழ் அரசுப் பணியில் இருப் பவர்கள் ஊழல் செய்து, அது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் அதற்கு குறைந்த பட்சம் 6 மாதங்களும் அதிகபட்சம், 5 ஆண்டுகளும் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. ஊழலில் ஈடுபட் டால் குறைந்த பட்ச தண்டனை இனி 3 ஆண்டு களாகவும், அதிகபட்ச தண்டனை 7 ஆண்டு களாகவும் உயர்கிறது. இதற்கான திருத்தம் ஊழல் தடுப்பு சட்டத்தில் செய்யப்படுகிறது.

லஞ்ச ஊழலை ஒழிப்பதற்காக இந்த சட்டத்தில் செய்யப்படும் முக்கிய திருத்தங்கள் வருமாறு: லஞ்ச வழக்கில், லஞ்சம் கொடுப்பவர், வாங்குபவர் என இரு தரப்பினருக்கும் தண்டனை விதிக்கப்படும். ஊழல் மூலம் அடைகிற பலன்களை கட்டுப் படுத்தும் வகையில், பறிமுதல் செய்யும் அதிகாரம், மாவட்ட நீதிமன்றத்துக்கு பதிலாக விசாரணை நீதிமன்றத்துக்கு (தனி நீதிமன்றம்) வழங்கப்படும். லஞ்ச ஊழல் வழக்கில் விசாரணையை 2 ஆண்டு களில் முடிக்க வேண்டும்.

வினியோகத்தில் ஊழல் செய்கிறபோது, சட்ட வரம்புக்குள் தனிநபர்கள் கொண்டு வரப்பட்டு வந்த நிலையில், இனி வணிக நிறுவனங்களும் சேர்க்கப் படும். அரசு ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுப்பதை தடுப்பதற்கு வணிக அமைப்புகளுக்கு வழிமுறைகள் வகுக்கப்படும்.

அரசு ஊழியர்கள் வேண்டுமென்றே லஞ்சம் வாங்குவது, கிரிமினல் குற்றமாக கருதப்படும். அத்த கைய வழக்குகளைப் பொறுத்தமட்டில் வருவாய்க்கு அதிகமாக குவித்த சொத்துகள் ஆதாரமாகக் கொள்ளப்படும்.

# அரசு ஊழியர்கள் லஞ்சம் வாங்கினால் 7 ஆண்டு ஜெயில்

**வேல்பொன்முடி**



லஞ்சமாக பணம் பெறுவதோடு மட்டுமல்லாமல், பணமற்ற பிற சலுகைகள் பெறுவது சலுகைகள் என்ற வரையறையில் கொண்டு வரப்படும்.

ஓய்வுபெற்ற, பதவியில் இருந்து விலகிய அரசு ஊழியர்கள் மீது வழக்கு தொடர்வதற்கு முன் அனுமதி பெற வேண்டும்.

பொதுப் பதவி வகிக்கிறவர்கள் தாங்கள் பதவியில் இருக்கிற போது சிபாரிசு செய்து அல்லது முடிவு எடுத்து, குற்றம் செய்தால், அதுதொடர்பாக விசாரணை நடத்துவதற்கு, புலனாய்வு செய்வதற்கு லோக்பால் அல்லது லோக் அயுக்தா அனுமதி பெற வேண்டும்.

இந்த திருத்தங்கள், உள்நாட்டு ஊழல் தடுப்புச் சட்டத்தில் உணரப்பட்ட இடைவெளிகளை நிரப்புவதோடு, ஊழலுக்கு எதிரான ஐ.நா.சபையின் மாநாட்டின்போது இந்தியா அளித்த உறுதி மொழியை நிறைவேற்றுவதாகவும் அமையும்.

ஏற்கனவே டெல்லி மேல்சபையில் நிலுவையில் உள்ள ஊழல் தடுப்புச் சட்ட (திருத்தம்) மசோதாவை பின் பற்றி இந்த திருத்தங்களை செய்ய மோடி அரசு முடிவு செய்துள்ளது.

## பிரதமர் என்கிற போர்வையில் ஒரு கார்பொரேட் கம்பெனி

தேசிய மருந்து விலை நிர்ணய அமைப்பின் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரத்தை பிரதமர் மோடி, அமெரிக்கா செல்வதற்கு முன்னதாக அந்நாட்டின் மருந்துக் கம்பெனிகளை மகிழ்விக்கும் விதமாக நீக்கினார். இதைத் தொடர்ந்து உயிர் காக்கும் மருந்துகளின் விலை மிகக் கடுமையாக 14 மடங்கு உயர்ந்துள்ளது. புற்றுநோய் மருந்தின் விலை 8500 ரூபாயிலிருந்து 1,10,000 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இது உலகிலேயே எந்த நாட்டிலும் நடைபெறாத கொடூரமான அராஜகமாகும் என சுகாதாரத்துறையில் பணியாற்றும் சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். புற்றுநோய்க்கான மருந்தான கில்வெக் மாத்திரையின் விலை ரூ.8500 லிருந்து 1 லட்சத்து 10000 ரூபாயாக உயர்ந்துள்ளது உலகில் எந்த நாட்டிலும் மருந்தின் விலை 14 மடங்காக உயர்ந்ததில்லை.

ரத்தக் கொதிப்பிற்கான பிளேவிக்ஸ் மாத்திரை 147 ரூபாயிலிருந்து 1,615 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

வெறி நாய்க்கடிக்கான ஊசியின் விலை 2,670 ரூபாயிலிருந்து 7000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

தேசிய மருந்து விலை நிர்ணய அமைப்பின் கட்டுப்பாட்டிலிருந்த 108 மருந்துகளின் விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

இந்திய நாட்டில் கவனிக்கப்பட வேண்டிய மற்றும் கவலைக்குரிய விசயம் என்னவெனில், அதிகாரப்பூர்வ தகவல்களின்படி 4.1 கோடி பேர் நீரிழிவு (சர்க்கரை) நோயினால் அவதியுறுகின்றனர். 4 கோடியே 7 லட்சம் பேர் இதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

22 லட்சம் பேர் காச நோயினால் துயருகின்றனர். 11 லட்சம் பேர் புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 25 லட்சத்திற்கும் மேலான ஹெச்.ஐ.வி.மற்றும் எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர். இந்நிலையில் மருந்துகளின் விலையேற்றம் மக்களை கடுமையாகப் பாதிக்கும். ஏழை மக்களும் நடுத்தர மக்களும் நோய் வந்தால் உயிர் வாழ உரிமையே இல்லையா? உயிர் வாழும் அடிப்படை உரிமையைப் பறிப்பதாக உள்ளது பாஜக அரசின் செயல் என்கின்றனர் சுகாதார ஆர்வலர்கள்.

மருந்து விலைகளின் கட்டுப்பாட்டை நீக்கியதைத் தொடர்ந்து சன் பார்மா மற்றும் ரான்பாக்ஸி மருந்துக் கம்பெனிகளின் லாப விகிதம் விழுக்காடு கூடியுள்ளது. டோரண்ட் மற்றும் லூர்ப்பின் மருந்து கம்பெனிகளின் லாபங்கள் முறையே 15 விழுக்காடும் 0.7 விழுக்காடும் அதிகரித்துள்ளது. அரசின் இந்த முடிவைத் தொடர்ந்து சன் பார்மா மற்றும் ரான்பாக்ஸி மருந்துக் கம்பெனிகளின் பங்குகளின் விலையும் 2 விழுக்காடு வரை கூடியுள்ளது. ஜிஎஸ்கே பார்மா மற்றும் டேவிஸ் லேப் கம்பெனிகளின் பங்குகளின் விலை 1 விழுக்காடும் கிளென்மார்க் கம்பெனியின் பங்கின் விலையும் கூடியுள்ளது. மருந்துவிலை அதிகரிப்பை எதிர்த்து அரசியல் வேறுபாடின்றி அனைத்துத்தரப்பு மக்களும் குரலெழுப்ப வேண்டும்.வ

**வாட்ஸாப் செய்தி.**

# சீவகசிந்தாமணி - அறிமுகம்

(தொடர்)

# கோவிந்தையார் இலம்பகம்

(கதைச் சுருக்கம்)





புலவர். கு. ஏழுமலை

சீவகன் கட்டியங்காரனுடைய ஆனிரைகளை ஆயர் காட்டின்கண் மேய்த்தனராக, அவற்றை வேடர்கள் கவர்ந்து கொண்டு சென்றனர். ஆயர்கள் அவற்றை மீட்கும் வகையிலராய் ஓடிவந்து கட்டியங் காரனிடத்தே முறையிட்டனர். கட்டியங்காரன் சினந்து தன் மக்கள் நூற்றுவரையும் தன் மைத்து னன் மதனனையும் ஆனிரையை மீட்டு வரும்படி ஏவினான். அவரெல்லாம் அவ்வேடர்க்கு எதிர் நிற்றலாற்றாதவராய் வறிதே மீண்டனர். அஃதறிந்த கட்டியங்காரன் வாளாவிருந்தனன்.

ஆயர் தலைவனாகிய நந்தகோன் இச்செய்திய றிந்து பெரிதும் வருந்தி, இந்நிரையை வேடரை வென்று மீட்டு வருகின்றவனுக்கு என் மகளாகிய கோவிந்தையை அளிப்பேன் எனத் தெருத்தோறும் முரசறைவித்தனன். மறவர் பலரும் வேடர்க்கு அஞ்சி வாளாவிருந்தனர். அஃதறிந்த சீவகன் சூளுரைத்துப் போர்க்கோலங்கொண்டு சென்று, அவ்வேடரொடு போர் செய்து அவரையெல்லாம் கொல்லாமல் அஞ்சி ஓடும்படி செய்தனன். சீவகன் நிரை மீட்டமை அறிந்த நந்தகோன் கோவிந்தையைச் சீவகனுக்குக் கொடுக்க முன்வந்தான். ஆயினும் சீவகன் அவ்வழ கியை தான் ஏற்றுக்கொள்ளாமல், தன் தோழனாகிய பதுமுகனுக்கு மணஞ்செய்வித்தனன்.

**காந்தருவ தத்தையார் இலம்பகம்**

சீவகன் முதலியோர் இராசமாபுரத்தின்கண் இவ்வாறு இனிது உறைந்தனராக, அந்நகரத்து வாழ்பவனாகிய சீதத்தன் என்னும் வணிகன் தன் பழவினைப் பயத்தால் தான் ஈட்டிய பொருளெல் லாம் கெட்டமையால், மனமுடைந் தான். தன்பால் எஞ்சியிருந்த ஒரே மரக்கலத்தைத் திரைகடலிலே ஓட்டி மீண்டும் பொருளீட்டத் துணிந்தனன். அம்மரக்கலங்கொண்ட பண்டங்களை ஏற்றிப் பணிமக்களோடு அதனை அலைகடலில் ஊர்ந்து ஓர் அழகிய தீவகம் அடைந்தனன். அந்நாட்டு மன்னனொடும் மாந்தரொடும் கேண்மை கொண்டு தன் பண்டங்களைப் பொன்னுக்கு மாற்றி, பெரும் பொருளீட்டினன். திங்கள் சில கழிந்தபின் அம் மன்னன் முதலியோரிடத்து விடை பெற்றுக் கொண்டு பொன் நிரம்பிய தன் மரக்கலத்தில் பணி மக்களோடு ஏறி மீண்டனன். இவ்வாறு சீதத்தன் மீண்டு வருங்கால் அவன் மரக்கலம் ஐந்நூறு காதம் இனிதாக இயங்கியது.

இனி, வெள்ளிமலையிலுள்ள வித்தியாதர வேந்த னாகிய கலுழவேகன் என்பவன் தன் மகள் காந்தருவ தத்தைக்கு இராசமாபுரத்திலேதான் திருமணம் நிகழும் என்பதனை நிமித்திகரால் அறிந்திருந்தான்.

அக்கலுழவேகன் முன் கூறப்பட்ட சீதத்தன் வாயிலாய் அத்திருமணத்தை நிகழ்த்தக் கருதி அவனைத் தன்பாற் கொணரும் பொருட்டுத் தரன் என்னும் வித்தைவல்ல விச்சாதரனை ஏவினான். அத்தரன் தனது வித்தை வன்மையால் கடலிடையே ஓடிவந்த சீதத்தன் மரக்கலம் காற்றாலும் மழையாலும் கலக் குற்றுக் கடலிலே மூழ்கிவிட்டது போல அவனுக்குத் தோன்றும்படி செய்தான்.

இந்நிகழ்ச்சி யால் மரக்கலம் பணிமாந்தர், பொருள் முதலியவற்றை இழந்த சீதத்தன், அம்மரக்கலத்தினின்றும் முறிந்து வீழ்ந்து மிதப்பதாகத் தனக்குத் தோன்றியதொரு மரத்துண்டைத்தைப் பற்றிக் கொண்டு அண்மை யிலிருந்ததொரு தீவின் கரையை அடைந்து பெரிதும் வருந்தியிருந்தான்.

அப்பொழுது, தரன் அவனைக் கண்டு "ஐய! யான் மநதிரம் வல்லேன், நீயிர் இழந்த மரக்கலம் முதலியவற்றை மீட்டுத்தர வல்லேன். ஆதலால் என்னோடு வருக!" என்று ஆறுதல் கூறி ஒரு யாட்டின் மேலேற்றி வான்வழிப் பறந்து சீதத்தனைக் கலுழவேகன் பாற் கொணர்ந்து சேர்த்தனன். அக்கலுழவேகனும் சீதத்தனுக்கு முகமன் பல மொழிந்து தன் முன்னோர்க்கும் அவன் முன் னோர்க்கு மிருந்த கேண்மையை எடுத்துக் காட்டி நட்புக் கொண்டான். பின்னர் காந்தருவ தத்தையின் வரலாறு கூறி, அவனை வீணாபதி என்னும் தோழி யோடு சீதத்தன்பால் ஒப்படை செய்தனன். பின்னரும் பொருள் பல அளித்து "நண்பனே! இவள் இன்றுதொட்டு நின் மகளேயாவாள். இவளை நீ நின் ஊர்க்கு அழைத்துச் செல்க! ஆண்டு, இவளை யாழ்ப் போரில் வெல்வானொரு காளைக்குக் கடி மணம் செய்விப்பாயாக!" என்று கூறி விடுத்த னன்.

சீதத்தன் அவளோடும், பரிசனங்களோடும் வானவூர்தியிற் புறப்பட்டு வரும்பொழுது தரன் முன்னர்த் தன் வித்தையால் மறைந்திருந்த மரக்கலம் முதலியவற்றை ஊறின்றிக் காட்டக் கண்டு, உவகை மிக்கு அவற்றோடு இராசமாபுரமெய்திக் காந்தருவ தத்தையைத் தன் மனையோள் பதுமைக்குக் காட்டி நிகழ்ந்தனவும் உணர்த்தினன்.

காந்தருவ தத்தையைக் கன்னிமாடத்திற் சேர்த்தினன். கட்டியங்காரன் உடன்பாடு பெற்றுக் காந்தருவ தத்தையை யாழில் வென்றோன் அவட்குக் கணவனாதற்குரியன் என்னும் செய்தியையும், யாழ்ப் போர்க்கு உரிய நன்னாளையும் நகரமெங்கும் முரசறை வித்துணர்த் தினன்.

பின்னர்ச் சீதத்தன் காந்தருவ தத்தையுடன் யாழ்ப்போர் செய்தற்கு வேண்டுவன வெல்லா மியற்றினன் பல நாட்டு மன்னரும் அவ்விடத்தே வந்து குழுமினர். நன்னாளிலே காந்தருவதத்தை யாழரங்கமேறித் தனது தெய்வ யாழின் சிறப்புத் தோன்ற வாசித்தாள். மன்னரும் பிறரும் இவ்விசை கேட்டு மெய்மறந்தனர். பின்னர், மன்னர் முதலி யோர் தனித்தனியே தத்தையொடு யாழியக்கித் தோற்றனர். ஆறு நாட்கள் யாழ்ப்போர் நிகழ்ந்தது. காந்தருவ தத்தையை வெல்வார் யாருமிலராயினர்.

இச்செய்தியறிந்த சீவகன், காந்தருவ தத்தையொடு யாழ்ப்போர் செய்தற்கெண்ணினன். அக்கருத்தைத் தந்தை கந்துக்கடனுக்குணர்த்தி விடைவேண்டி நின்றனன். அது கேட்ட கந்துக்கடன் அநங்கமாலை என்னும் பரத்தையின் பொருட்டுக் கட்டியங்காரன் சீவகன்பால் உட்பகை கொண்டுள்ளான் என்ப தனை நாகமாலை என்பவளால் அறிந்திருந்த மையால், "நன்று மைந்த நீ அங்கு செல்லுங்கால் படையமைத்து விழிப்புடன் செல்க! என்று கூறினன்.

சீவகன் அவ்வாறே சென்று காந்தருவ தத்தை யோடு யாழ்ப்போர் செய்து அவளை வென்றனன். காந்தருவ தத்தையும் உளமகிழ்ந்து சீவகன் திண்டோளில் மாலையிட்டனள். இந்நிகழ்ச்சியால் கட்டியங்காரன் நெஞ்சம் புழுங்கினான். முன்னரே தத்தைக்குத் தோற்றிருந்த மன்னர் மக்கள் பொறாமைத்தீயைத் தன் சொல்லாகிய நெய்யாலே பெரிதும் வளர்த்தான். "சீவகனைப் படைக்கலப் போரில் வென்றோனே தத்தைக்குக் கணவன் ஆகும் உரிமையுடையோன்! எழுக! போரிடுக!" என்று தூண் டினன். அவன் சொற்கேட்ட மன்னரெல்லாம் ஒருங்கே திரண்டு சீவகனுடன் போராற்றினர். ஒருங்கே தோற்றொழிந்தனர். பின்னர் சீவகன் காந்த ருவ தத்தையைத் தன் மனைக்கு அழைத்துக் கொணர்ந்து நன்னாளிலே திருமணம் புரிந்து கொண்டு அந்நங்கையோடு கூடிப் பெரிதும் இன்புற்றிருந்தனன்.

**தொடரும்....**

# தாலி!



**பழ. கருப்பையா,**
சட்டமன்ற உறுப்பினர்

திடீரென்று தாலி அறுப்புப் போராட்டம் செய்தித்தாள்களில் பரபரப்பு எற்றியிருக்கிறது.

இந்து மதத்தின் பேரால் ஒரு சிறு கூட்டம் பெரியார் திடலுக்குக் கிளம்பிப்போய் அதைத் தடுத்து நிறுத்த முயல, அங்கே உள்ளவர்கள் எதிர்த்து நிற்க கைகலப்பு ஏற்பட்டு இரு தரப்பாரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தாக்க வந்தவன் தடுக்க முயன்றவன் என்ற வேறு பாடில்லாமல் இரு தரப்பினரையும் கைது செய்வது தான் நடுநிலை என்று காவல்துறை பழகியிருக்கிறது.

புனிதத்தாலி அறுக்கப்படுவதால் இந்துக்களின் மனம் புண்படும் என்றும் அதனால் சட்டம்ஒழுங்கு கெட்டுவிடும் என்றும் அரசு வழக்கறிஞர் நீதிமன்றத் தில் வாதங்களை முன்வைத்து தடையாணை பெற்றிருக்கிறார்.

அவனவன் பெண்டாட்டி தாலியை அவனவன் அறுப்பதில் இன்னொருவனின் மனம் ஏன் புண்பட வேண்டும்? கட்டிக்கொண்டவள் "சரி" என்கிறாள், கட்டியவன் அறுக்கிறான். இதில் உனக்கென்ன வந்தது?" என்று கேட்பாரும் உண்டு.

இவ்வளவுக்கும் கி வீரமணி பெரியாரைப்போல மூர்க்கமாக "அறுக்கும் போராட்டம் என்று சொல் லாமல் "அகற்றும் போராட்டம் என்று அதை மென்மைப்படுத்தித்தான் சொல்லியிருக்கிறார்.

எங்கள் வீட்டிலேயே தாலி அறுபட்ட நிகழ்வு ஒன்று நடந்ததுண்டு.



ஒருநாள் நான் பொதுவேலையாக வெளியே சென்றிருந்தேன். பட்டப்பகலில் ஒரு திருடன் என் வீட்டுக்குள் நுழைந்து போராடிய என் மனைவியைக் கீழே தள்ளிவிட்டுத் தாலிச்சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டான்.

சட்டமன்ற உறுப்பினரின் மனைவி என்பதால் எனக்கு முன்னால் காவல்துறை வந்துவிட்டது.

சங்கிலியை அறுத்ததில் அவளுடைய கழுத்தில் சிராய்ப்பு ஏற்பட்டிருந்தது கீழே தள்ளியதில் முழங்கையும் தலையும் அடிபட்டிருந்தன. ஆனால் அவள் டிபுடி கமிஷனரிடம் சொன்னாள் ஐயா, அந்த பட்டுக்கிடப்பான் களவாணி என் பின்னாலேயே வீட்டுக்குள்ளே நுழைஞ்சு என் தாலிச் சங்கிலியை அத்திட்டான் பத்துப் பவுனய்யா! எங்க ஆத்தா வீட்டிலே கலியாணத்தன்னைக்குப் போட்டது! எங்க அப்பச்சி சிங்கப்பூர்ல வாங்கியாந்த சுத்தத் தங்கம்"

"தாலிச்சங்கிலி அறுபட்டதாலே கணவனுக்கு ஏதாவது நேர்ந்துவிடுமோ" என அவள் அஞ்சக்கூடும் என்று நான் கவலைப்பட்டேன். ஆனால் அவள் பத்து பவுன் என்றும், சிங்கப்பூர் தங்கம் என்றும் புலம்பினாளே ஒழிய புனிதச் சின்னம் அறுந்துவிட்டது குறித்த எண்ணம் அவளுக்கு கிஞ்சிற்றும் இருந்ததாகத் தெரியவில்லை. அந்த எண்ணம் அரசாங்க வக்கீலுக்குத்தான் மொத்தமாக இருக்கிறது. பிறகு இரண்டு, மூன்று நாள் வெறுங்கழுத்தோடு மிகவும் சோகமாக இருந்தாள். காவல்துறை திருடனையும் பிடித்துத் தாலிச் சங்கிலியையும் மீட்டுக் கொடுத்து விட்டது.

நம்ம ராங்கியம் கறுப்பர் விடுவாரா? அவன் கண்ணிவிஞ்சு போக என்று சாபம் கொடுத்துவிட்டு, தாலிச் சங்கிலியை அவளே போட்டுக்கொண்டு அமைதியாகிவிட்டாள்.

ஒவ்வொரு நாளும் விடிந்தும் விடியாத வைகறைப் பொழுதில் வாசல் தண்ணீர் தெளிக்கும் போது. கோலம் போடும்போது பயிற்சிக்காக நடக்கச் செல்லும்போது தமிழ்நாடு முழுதும் ஆயிரக்கணக்கான பெண்களின் தாலிச்சங்கிலிகளை அறுக்கிறார்கள்.

வீரமணியின் செயல்பாட்டுக்குத் தடையாணை பெற்றுக்கொடுத்ததுபோல். அதே செயலை அனுமதி இல்லாமல் செய்கிற திருடர்களின் செயல்பாட்டுக்குத் தடையாணை பெற்றுக்கொடுக்கக் கூடாதா? வீரமணி அறுத்தால்தான் புனிதம் கெடுமா? திருடர்கள் அறுத்தால் புனிதம் கூடுமா? இந்து மதம் சொல்ல வேண்டாமா?

கி.வீரமணிக்குக் கறுப்புச் சட்டையின் மீதுள்ள மோகமும் மணமான பெண்ணுக்குத் தாலிச்சங்கிலியின் மீதுள்ள மோகமும் வெறும் அடையாள மோகம்தான்.

இதுபோன்ற எந்தப் போராட்டமும் தமிழ் நாட்டுக்குப் புதிதில்லை, தடையாணைகள்தான் புதிது.

தாலி அறுப்புப் போராட்டத்தோடு நிறுத்தவில்லை பெரியார். இராமர் படத்தை செருப்பால் அடிக்கும் நிலையும் வந்தது.அதைச் சங்கராச்சாரியார் பொருட்படுத்தவில்லை. ஆனால் கருணாநிதி கலங்கிப் போய்விட்டார். தேர்தல் காலத்தில் இராமருக்கு இத்தகைய சிரமத்தைக் கொடுத்திருக்கக்கூடாது என்பதுதான் கருணாநிதியின் கவலை.

இவை எல்லாவற்றையும் விட பெரியார் நடத்திய மிகப்பெரிய போராட்டம் பிள்ளையார் உடைப்புப் போராட்டம்.

இதுபோன்ற காலகட்டங்களில் ஆட்சியில் இருந்த இராசாசி எந்தப் போராட்டத்தையும் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. அவரை விட பெரிய இந்து யார்?

கடவுள் மறுப்பு வாசகம் பெரியார் சிலைகளில் எழுதப்பட்டிருக்கிறதே என்று சினங்கொள்கிறார்கள்.

நீயும் சங்கராச்சாரியார் சிலையை ஊருக்கு ஊர் வைத்து "கடவுள் இருக்கிறார்" என்று எழுதி வை. இல்லையென்றால் சங்கராச்சாரியார்தான் கடவுள் என்று வேண்டுமானாலும் எழுதி வை யார் கேட்கப் போகிறார்கள்.

ஆயிரம் ஆண்டுகளாக அமுக்கி வைக்கப்பட்ட ஓர் இனம் பெரியார் போல் ஒரு தலைவர் கிடைத்து வீறிட்டு எழும்போது, அது, தன் எல்லைக்கோட்டை அடையாமல் நிற்கவே நிற்காது என்று இணையற்ற அறிஞரான இராசாசிக்குப் புரிந்திருந்தது. ◆

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிகளால் உலகமே ஒரு கிராமமாக சுருங்கிவிட்டது. இணையதள சேவைகள் என்பது மக்கள் வாழ்வில் இன்றியமை யாத தேவையாகிவிட்டன. அமெரிக்கா போன்ற நாடுகள் இணைய சேவைகளை இலவசமாக வழங்கு வதால் கோடிக்கணக்கான மக்கள் இணையத்தை பயன்படுத்தி வருகின்றனர். இந்தியாவில் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் இணையதள சேவைகளை வழங்கி வருகின்றன.

இணையதளம் என்பது நாட்டின் சொத்து. அலைக்கற்றைகள் மூலமாக இணைய சேவை அளிப்பதற்கு மத்திய அரசு உரிமங்கள் தருகின்றது. இவ்வாறு உரிமம் பெற்ற நிறுவனங்கள் சில இணையதள தகவல் தொகுப்புகளை கட்டுப்படுத்த விரும்புகின்றன. இதனால் இணைய சமநிலை பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

கணினிகள், கைபேசிகள், டேப்லட் போன்ற வற்றின் மூலம் இணைய சேவையைப் பெற்று வரும் வாடிக்கையாளர்கள் அதற்கு உரிய கட்டணங்களை தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு செலுத்தி வருகின்றனர். ஆனால் இக்கட்டணங்களை விருப் பம் போல அவ்வப்போது நிர்ணயித்துக் கொள்ளும் தொலைத் தொடர்பு நிறுவனங்கள். தற்போது இணையதள பக்கங்களை மக்கள் பயன்படுத்துவ தற்கு கட்டுப்பாடுகளை கொண்டு வர முயற்சி செய் கின்றன.

இணையதள நிறுவனங்கள், வாட்ஸப், ஃபேஸ்புக், ஹைப், யூடியுப் மற்றும் மொபைல் அப்ளிகேஷன் தயாரிப்பாளர்கள் கட்டணம் செலுத்தினால்தான் அவர்களின் இணையதளங்களை விரைவான வேகத் தில் அளிக்கப்படும் இல்லையேல் குறைந்த வேகத்தில் தான் செயல்படும் என்று கூறுகின்றன. இதனால் இனி இந்த சேவைகளுக்கு வாடிக்கையாளர்கள் தனித்தனியாக கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் கண்காணிக்கும் பொறுப்பில் உள்ள அமைப்பான தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் (ட்ராய்) இதுகுறித்து வரைவு அறிக்கை ஒன்றை மார்ச் 27ஆம் தேதி மக்கள் கருத்துக் கேட்புக்காக வெளியிட்டு இருக்கிறது.

ட்ராய் வெளியிட்டுள்ள அறிக்கையில் இணைய தளங்கள் கட்டணம் இன்றி பார்க்கும் வசதி தொடர்ந்தால் தனிமனிதர் மற்றும் நாட்டின் பாது காப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கூறப் பட்டுள்ளது. எந்தெந்த இணையப் பக்கங்களை காண வேண்டும் என்பதை பயன்படுத்தும் வாடிக் கையாளர்தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் இணையதள நிறுவனங்கள் அளிக்கும் கட்டணத் திற்கு ஏற்பவே இணையத்தின் வேகம் இருக்கும் என்பதால் சில இணையதளங்களுக்கு மட்டுமே முன்னுரிமை கிடைக்கும் இதன் மூலம் மக்கள் தங்கள் விருப்பப்படி இணைய பக்கங்களை பயன் படுத்தும் வாய்ப்பு பறிபோகும்.

இணையதள சமநிலையை சீர்குலைக்கும் வகை யில், தனியார் பெருநிறுவனங்களுக்கு சாதகமாக தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் முடிவு எடுக்கக் கூடாது என்று இதுவரை 8 இலட் சம் வாடிக்கையாளர்கள் ட்ராய்க்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளனர். மக்கள் தேவைகளுக்கு ஏற்ப எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி விருப்பம் போல இணையதள சேவைகளைப் பயன்படுத்திக் கொள்வ தற்கு ஏற்ற வகையில் மத்திய அரசு உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.




# இணையதள சமநிலையை சீர்குலைக்கும் செயல் வைகோ அறிக்கை



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**

# மன்மதனும் சித்திரைப்பாவையும்



புலவர் கு.ஏழுமலை.
திண்டிவனம்.

கரும்புவில் சுரும்புநாண் மலரம்பாம், அரவிந்தம்
மாம்பூ, அசோகம், நறுமுல்லை, பனிநீலம்
யாவும் கைக்கொண்டு வசந்தத்தில் தென்றலேறி
சித்திரைப் பாவையைக் காதல் வயப்படுத்த;
உருவிலான் இனிதே வந்தான் நலம்நாடி !
தேனுயர் மகரவீணைத் தீஞ்சுவை இனியாள்
சித்திரைப் பாவையும் காதல் வயப்பட்டு;
வான்சுவை அமிர்தம் ஊட்டி வையம்
வாழவே இணைந்தே வந்தாள் இன்றே !
சந்தனம் பூத்தாற் போன்றே மக்கள்
மனம்பூக்க சித்திரை இளங்கிளி வந்தாள் !
நாவீற்றிருந்தப் புலமகளும், பூவீற்றிருந்தத் திருமகளும்
நாளும் புல்ல தாமரை முகத்தாள்
நானிலம் வாழவே சித்திரை வந்தாள் !
கலன்பெய்ப் பேழைஎனச் செல்வம் தழைக்க;
பாடகம் சுமந்த சீறடியாள் வந்தாள்
செண்பகத் தண்மலர் தாதுண்ணும் வண்டென ;
காதலர்கள் வெண்சாமரம், தீபம், பொற்குடம்,
கயல்கொடி, நிலைகண்ணாடி, அங்குசம், கதலிகை,
வெண்முரசம் எண்ணிய மங்கலங்கள் எட்டும்
ஏந்தியே ! சித்திரப்பாவையை வருக ! வருகெனவே !
மங்கலம் பொங்கவே வரவேற்று மகிழ்ந்தனர் !



– புலவர் கு. ஏழுமலை

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

